Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது மார்கழி 24 ஆம் நாள் ஷஃபான் பிறை 11 (8-1-63) செவ்வாய்க்கிழமை இதழ் 329

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்டஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணுடி விற்பனையாளரும்
45, மெயின்வீதி, : யாழ்ப்பாணம்.

# ஆனையிறவு, கிளிநொச்சி பகுதிகளில் கடும் மழை

## ரஸ்தா போக்குவரத்து பலவிடங்களில் துண்டிப்பு

### வள்ளங்களை அனுப்பிஉதவுமாறு ஸ்தல எம். பி. வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கடந்த சில நாட்களாக கடும் மழை தொடர்ந்து பெய்வதால், கிளிநொச்சி, ஆனையிறவு பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுள்ளன. ஆனையிறவுப் பகுதியில் மழை தொடர்ந்து பெய்தால், புகையிரதத் தொடர்பு துண்டிக்கப் படுவதுடன் யாழ்ப்பாண குடாநாடும் துண்டிக்கப் படலாமென அஞ்சப்படுகிறது.

கிளிநொச்சிப் பகுதியில் தண்டாவளை, முள்ளியான், வட்டக்கச்சி, இராமநாதபுரம், முரசுமோட்டை ஆகிய பகுதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி கிராமப்புறங்களுக்கு கூப்பன் அரிசி விநியோகம் இவ் வாரம் நடைபெற வில்லை.

ஆனையிறவுப் பகுதியில் மழை இன்றும் தொடர்ந்து பெய்தால் புகையிரதத் தொடர்பும் பிரதானவீதி போக்குவரத்து தொடர்பும் துண்டிக்கப்படலாமென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனையிறவுப் பகுதியில், தட்டுவங்கொட்டி, என்ற பகுதி முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. நேற்று முதல் கிளிநொச்சி-யாழ்ப்பாணம் பாதையின் சில பகுதிகளில் ரயில் சேவை மணிக்கு 4 மைல் வீதத்தில் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரணைமடு குளத்திலிருந்து நேற்று மேலதிகமாக 1 அடி 10 அங்குலத் தண்ணீர் பாய்ந்ததென்றும் இது தொடர்ந்தால் சம்பந்தப்பட்ட பகுதிகள் முற்றாகத் துண்டிக்கப்படலாமெனவும் தெரியவருகிறது. கண்டிக்

(8-ம் பக்கம் பார்க்க)

## 'பண்ணைப்பாதை திருத்தாவிடில் பஸ் செலுத்தமாட்டோம்'

### யாழ். மேற்கு கிளை இ. போ. ச. ஊழியர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

'பண்ணைப் பாதை, வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு மோசமடைந்துள்ளதால் இன்னும் மூன்று மாதத்திற்குள் பாதை திருத்தி அமைக்கப்படாவிடில், அப்பாதையின் மூலம் பஸ்களைச் செலுத்துவதில்லை என்ற தீர்மானம் ஒன்று அண்மையில் அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்க யாழ்-மேற்கு கிளையின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளைத் தலைவர் திரு. மு. மாரிமுத்துவின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பஸ் நிலைய பொறுப்பாளர், மேற்பார்வையாளர்கள், நேரசூசியாளர்களின் சேவை பிரயாணிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் அதிருப்தியை உண்டு பண்ணுவதால் அவர்களை மாற்றம் செய்யவேண்டுமென்றும் சங்கத்தின் காரியதரிசி திரு. சி. ஜெயரத்தினத்தின் தற்காலிக வேலைநீக்கத்தையிட்டு ஒரு கிழமைக்குள் மீண்டும் விசாரணைக்கு எடுக்காவிடில் நேரடி நடவடிக்கை எடுப்பதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## இலங்கைப் பிரதமர் மாஸே-துங் சந்திப்பு

பீக்கிங், ஜன. 7

இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவும், அவரது தூதுகோஷ்டியும் சீனக்கம்யூனிஸ்ட் தலைவர் மாஸே-துங்கைச் சந்தித்தனர். சீனப் பிரதமர் சூ-என்-லாய், உதவிப் பிரதமர் சென்-யீ ஆகியோரும் அப்போது உடனிருந்தனர். இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோவும் சீனத்தலைவர் மாஸே-துங்கைச் சந்தித்த பின், தாயகம் திரும்பினர்.

## இன்று பார்லிமெண்ட் செனட் கூட்டம்

கொழும்பு, செவ்வாய்

இன்று பிற்பகல் 2 மணிக்கு பார்லிமெண்ட் கூடுகிறது. செனட் சபையும் இன்று பிற்பகல் கூடும்.

## திருவாதிரை உற்சவம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

நல்லூர் தெற்கு ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தில் இன்று மாலை ஆரம்பமாகி நாளைக் காலை வரை திருவாதிரை உற்சவ விழா நடைபெறவிருக்கிறது. சமயச் சொற்பொழிவுகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## சர்க்கரையில் கொள்ளை லாபம்!

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் சர்க்கரை கட்டுபபாட்டு விலை 49 சதமாக இருக்கக் கூடியதாக யாழ்ப்பாணத்தில் 90 சதமாகவும், கோண்டாவிலில் 75 சதமாகவும் விற்கப்படுவதனை உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி கண்டு பிடித்துள்ளார். கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக விற்பனை செய்தவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

## 'நீதிவிசாரணைக்கமிஷன் நியமிக்க கேட்போம்'

—டாக்டர் நாகநாதன்

### பார்லிமெண்டிலும் இன்று ஆட்சேபனை கிளப்பப்படும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

உணவு மந்திரி திரு. டி. பி. இலங்கரத்னவுக்கு எதிராகக் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் தாக்கப்பட்டதுபற்றி இன்று பார்லிமெண்டில் பிரச்னை கிளப்பப்படவிருப்பதாகத் தமிழரசுக்கட்சி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆர்ப்பாட்டத்தின்போது வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கமும் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையாவும் தாக்கப்பட்டது தெரிந்ததே.

சட்டத்துக்கு மாறாக நடந்துகொள்ளாத அப்பாவிப் பொதுமக்கள்மீது பொலிசார் கொடூரமாக, சட்டவிரோதமாக, மனிதத்தன்மையற்ற முறையில் நடந்துள்ளனர் என்று தமிழரசுக்கட்சித் தலைவர்கள் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

### கமிஷன் நியமிக்கவேண்டும்

'கறுப்புக்கொடி காட்டி' அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள்மீது பொலிஸார் நியாயமற்றமுறையில் தாக்குதல் நடத்தியது சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு நீதிபதி ஒருவரைக் கொண்ட விசாரணைக் கமிஷன் நியமிக்குமாறு கோரப்போவதாக தமிழரசுக்

(8-ம் பக்கம் பார்க்க)

## சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு 'பிராவ்டா' கண்டனம்

மாஸ்கோ, ஜன. 7

உலக கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு சீனக கம்யூனிஸ்ட்கட்சி தொல்லை விளைவித்து வருவதாக பிராவ்டா பத்திரிகை தலைப்புச் செய்தியாக பிரசுரித்திருக்கிறது.

## பாடசாலைகளை மீண்டும் ஒப்படைக்கும் விஷயம்

### 2 வருடங்கள் ஆகியும் இன்னும் வாக்கெடுப்பு இல்லை

கொழும்பு திங்கள்

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில பாடசாலைகளை திருப்பிக்கொடுப்பது சம்பந்தமாக விசேஷ விதிகளின் கீழ் வாக்கெடுப்பு நடத்துமாறு விண்ணப்பித்து இரு வருடங்கள் ஆகியும், கல்வி டைரக்டர் இன்னும் வாக்கெடுப்பு நடத்தவில்லை.

ஒரு பாடசாலையில் 75 சதவிகிதமான பெற்றோருக்கும் ஆசிரியர்களும் இரகசிய வாக்கெடுப்பின்கீழ் கட்டணம் வசூலிக்கவேண்டுமென நிர்மாணித்தால், அப்பாடசாலை மீண்டும் அதன் சொந்தக்காரர்கள் வசம் கல்வி டைரக்டர் ஒப்படைக்கவேண்டும்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, உரும்பராய் இந்துக்கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, காரைநகர் இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, ஆகியவை இவ்வித வாக்கெடுப்பு நடத்துமாறு விண்ணப்பித்திருக்கிறது.

வாக்கெடுப்பு நடத்துமாறு இதுவரை கல்வி மந்திரியிடமிருந்து உத்தரவுகிடைக்கவில்லை என கல்வி இலாகா அதிகாரி ஒருவர் கூறினார்.

கல்வி டைரக்டர் நிர்வாகத்திலுள்ள பாடசாலைகளை மேற்கொள்ளும் விஷயம் ஏற்கனவே பூர்த்தியடைந்து விட்டது. மொத்தம் 2623 பாடசாலைகளில் இதுவரை 2392 பாடசாலைகள் கல்வி இலாகாவால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# தமிழ் இலக்கியவிழா

## யாழ்ப்பாணத்தில் 12-ந் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கை சாகித்தியமண்டலத்தின் ஆதரவில் இம்மாதம் 12, 13 திகதிகளில் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் தமிழ் இலக்கியவிழா நடைபெறவிருக்கின்றது. இவ்விழாவை யொட்டி நேற்றிருந்து வடபகுதியில் உள்ள கல்லூரிகளில் தமிழ் இலக்கிய வாரம் ஆரம்பமாகியுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை வடபகுதி உதவிவித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் செய்துள்ளார். தமிழ் இலக்கியவிழா நிகழ்சிகளை இலங்கை வானொலி ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்பவிருக்கின்றது.

யாழ்ப்பாண நகர மேயர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் இவ்விழாவை ஆரம்பித்து வைக்கவிருக்கிறார். சனிக்கிழமை காலை நிகழ்ச்சிகள் முன்னாள் தபால் தகவல் அமைச்சர் திரு. சு. நடேசபிள்ளை தலைமையில் நடைபெறும், இளைப்பாறிய உதவி வித்தியாதிபதி திரு. க. ச. அருள்நந்தி, பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் விரிவுரைகளும் உரைநடை பற்றிய கருத்தரங்கமும் நிகழும்.

மாலை நிகழ்ச்சிகள் உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் தலைமையில் ஆரம்பமாகும். திரு. சு. நடேசபிள்ளை யாத்த 'சகுந்தலை வெண்பா' நூல் அரங்கேற்றம் செய்யப்படும்.

ஞாயிற்றுக்கிழமை காலை நிகழ்ச்சிகள் கொக்குவில் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு. ச. பேரின்பநாயகம் தலைமையில் வித்துவான் க. வேந்தனார், பண்டிதர் வி. சி. கந்தையா ஆகியோர் விரிவுரை நிகழ்த்துவார்கள். கவிதை மரபுபற்றிய கருத்தரங்கில் திரு. சோ. நடராசா தலைமையில் திரு. இ. அம்பிகைபாகன், பண்டிதர் க. யோ. ஆசிநாதன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

மாலை நிகழ்ச்சிகள் முதலியார் செ. சின்னத்தம்பி தலைமையில் ஆரம்பமாகும்போது திரு. க. தி. சம்பந்தன், சிறுகதையிலக்கியம்பற்றியும் பண்டிதை அ. தங்கம்மா பெண்களும் தமிழிலக்கியமும்பற்றியும் உரைநிகழ்த்துவர். கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

---

சிறந்த சேமிப்பு
அதிக ஆதாயம்
உயர்ந்த வட்டி
6%
உறுதியான இடம்
சிலோன் றிசேவ்
லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள பெரிய உயர்ந்த இன (Rex Breed) அல்சேஷன் பெட்டை நாய்க்குட்டி உடனே விற்பனைக்கு உண்டு. வயது 10 மாதம். நேரில் வரவும்.

இல: 3, கச்சேரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். 637.

**தொய்வு: நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50

வைத்தியர் பரிபூரணாநந்தா
கைலாயபிள்ளையார்கோவிலடி.
யாழ்ப்பாணம்.

# "மனிதன் திருந்துவதற்காகவே துன்பம் வருகிறது"

## திருவாசக விழாவில் கி. வா. ஜ. பேச்சு

திருக்கேதீச்சரம், திங்கள்

"மனிதன் இறைவனுடைய அருளால் இன்பதுன்பங்களை அடைகின்றான். இன்பம்வரும்போது அகந்தையும் துன்பம் வரும்போது கோபமும் ஏற்படுகின்றது. கோபம் உண்டாவது காரணமாக பிறரிடம் சிரத்தை உண்டாகின்றது. நெஞ்சத்தில் இறைவனுடைய எண்ணம் இருக்குமானால் அவனுடைய உள்ளம் திண்மையாகின்றது. துன்பத்தைக் கண்டு வரவேற்பவர்கள் பெரியவர்களாகின்றார்கள்."

வித்துவான் கி. வா. ஜகந்நாதன் திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் நடைபெற்ற திருவாசகவிழா மூன்றாம் நாள் காலை நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தமது தலைமையுரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

எமது முன்னோர்களின் அனுபூதிகளில் வேறுபாடில்லை. அவர்களின் அனுபூதிகளை நாம் அனுபவிக்கும்போதுதான் வேறுபாடு கற்பிக்கின்றோம். அனுபூபதிமான்களுடைய ஆற்றலை ஒருபோதும் அளவிடக்கூடாது. நாம் திருந்தவேண்டும் என்பதற்காகவே இறைவன் எமக்குத் துன்பத்தைத் தருகின்றான். இதனை நாம் உணர்ந்துமகூட மீட்டும் மீட்டும் அதிலே ஆசைப்படுகின்றோம். சமயசாஸ்திரங்கள் நமக்கு வாழும் நெறியைக் காட்டுவன. தோத்திரங்கள் நம்மைத் தன்பால் ஈர்த்துக் கொள்வன, சமயசாஸ்திரம் அனுபவம் தராது இருக்க சமயம் அனுபவம் தருகிறது. அனுபவத்தை நாம் அடைய மட்டுமே சாஸ்திரங்கள் உதவ வேண்டும் மனிதன் ஆராய்ச்சியோடு பிறந்தாலும் அந்த ஆராய்ச்சி ஒருபோதும் முடிவதில்லை. ஆராய்ச்சி அனுபவம் அடைய மட்டும் உதவ வேண்டும். அனுபவத்தில் புகுவதே வாழ்க்கையின் நோக்கு ஆகும். மனம் எப்போது ஒருநிலைப்படுகிறதோ அப்போது இன்பம் கிடைக்கிறது.

**திருவாசகம் கவலை நீக்கும்**

திருவாசகம் வாழ்நாள் முழுவதும் ஓத வேண்டும். ஆண்டவனின் திருவருள் இலக்குக்கு ஆளாக வேண்டுமானால் திருவருளின் சுவையையுணர வேண்டும். கடவுள் திருவடியில் கண்ணீர்விட்டால், அருள் கிடைக்கும். திருவாசகம் ஓதுவதினால் கவலைகள் அழிந்துவிடும். அருளாளர் தரும் திருவாக்கு மகிழ்ச்சியை உண்டாக்குகிறது புலன்கள் வாயிலாகவே உள்ளத்திற்கு உணர்ச்சி கொடுக்க வேண்டும். புலன்களை அடக்க புலன்களே உதவ வேண்டும். அனுபவ நிலையினால் வரும் வார்த்தைகளே உள்ளத்தில் நிலைக்கக் கூடியன.

உள்ளம் உருக்கும் திருவாசகம் படிக்கக் கேட்டால் நாமும் உள்ளம் உருகுகின்றோம். உள்ளத்தோடு உறைந்து தேன் சொற் பொருள்நயத்துடன் நின்றுவிடாமல் திருவாசகத்தினுள் புகவேண்டும். மணிவாசகர் எங்கு பாடியழுதாலும் அது நமக்குக் குயிலபாட்டு. மணிவாசகர் தென்னாட்டில் அவதரித்தது நமது தவப் பெருமையே.

**சமயப் பிரச்னையாக மாறிவிடுகிறது**

திரு. கீ. சிவானந்தன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

உடலுக்கும் வளத்திற்கும் திருவாசகம் உதவுகிறது. திருவாசகம் உருக்கமான அழுகையைத் தருகிறது. அனுபவ முதிர்ச்சியடைந்தவர் மணிவாசகர். அனுபவத்திற்கு சிறப்பு உண்டு. சமயத்துறையைப் பொறுத்தவரையில் குழப்பமில்லை. தெளிவு உண்டு. சமயசார்புடையவர்கள் சமயச் சார்பில்லாதவர்களிடையே சமயக் குழப்பம் உண்டாக்குவதன் மூலமே சமயவளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

அரசியல் பிரச்சனை, சமுதாயப் பிரச்னையாகி சமயப பிரச்னையாக மாறிவிடுகிறது. வாழ்க்கை முறையில் ஒழுங்கும் கட்டுப்பாடும் வேண்டும்.

வித்துவான் பொன். அ. கனகசபை தமது சொற்பொழிவில் தெரிவித்ததாவது:

உலகில் எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு. தமிழ் பக்திக்குரிய நூல். தமிழைப் போல உலகில் பக்திக்குரிய நூல் வேறில்லை. சைவத்திற்கு உயிரூட்டியவர் மணிவாசகர். அவர் இல்லையாயின் தமிழ்மொழிக்கு இத்தகைய சிறப்பு வந்திருக்காது. தமிழ்த் தாய்க்கு கண் போன்று இருப்பது திருவாசகம். உலகில் சிறப்புடைய நூல்களாகக் கருதப்படும் எட்டு நூல்களில் திருவாசகமும் ஒன்று. கடவுள் மனிதனுக்கு சொன்னது கீதை. மனிதன் கடவுளுக்குச் சொன்னது மணிவாசகம கடவுளை மனிதனுடன் இணைக்கும் திருவாசகம் வாழ்க்கைக்கும் பயிற்சியாக வேண்டும் சித்தத்தைச் சிவன்பால் வைத்து செய்வனவற்றைத் தவமாக்க வேண்டும்

திரு. செ. தனபாலசிங்கன் பேசும்போது "அனுபூதி மான்களின் வாக்குகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இந்திரியக் கோளாறு இல்லாமல் வாழ்வதுதே சிவானுபவச்செல்வம்பெறவழியெனவும், சாஸ்திரங்களைத்துருவி ஆராய்வதினால் எதனையும் கண்டுவிடமுடியாது எனவும் குறிப்பிட்டார். திரு. நா. சொர்ணலிங்கம் திருவாசகப் பாடல்களைப் பாடினார்.

மாலை நிகழ்ச்சிகள் திரு. கே. பி. ஹரன் தலைமையில் நடைபெற்றது. வித்துவான் கி. வா. ஜகந்நாதன் திருச்சதகப்பாடல்களை விளக்கிப் பேசினார். திரு. த. குமாரசாமிப் புலவரும் பேசினர்.

மூன்று தினங்கள் நடைபெற்ற திருவாசக விழாவிற்கு பல் வேறிடங்களிலிருந்தும் மக்கள் வந்திருந்தனர்.

---

## இ. தொ. கா. வின் கலாச்சாரக் கிளை

கொழும்பு, திங்கள்

இதுவரைகாலமும் தொழிற்சங்க வேலைகளில் மட்டும் ஈடுபட்டுவந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இனிமேல் கலாச்சார பண்பாட்டு வேலைகளிலும் ஈடுபடவிருக்கிறது. எழுத்தாளரும் முன்னைநாள் எம். பி.யுமான திரு. சி. வி. வேலுப்பிள்ளையின் தலைமையில் கலாச்சார பண்பாட்டு வேலைகளில் ஈடுபடுவதற்கென கலாச்சார தகவற்பகுதி ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

புதிதாக அமைக்கப்பட்ட இந்தப் புதிய கலாச்சார தகவற்பகுதி தமிழ் புத்தகங்களை சிங்களத்திலும் சிங்களப் புத்தகங்களைத் தமிழிலும் மொழிபெயர்க்கும். நாட்டியம், சங்கீதம், நாடகம் ஆகியவற்றிலும் இது கவனம் செலுத்தும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ஒரு சஞ்சிகையும் வெளியிடப்படுமெனத் தெரிகிறது.

---

## தற்கொலைக்கு எத்தனித்தவர்

### ரூ. 100 நன்னடத்தை பிணையில் விடப்பட்டார்

யாழ்ப்பாணம், திங்கள்

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரி காசநோயாளர் எச். பொன்னுத்துரை என்பவர் தாமே தமது தலையில் ஒரு கம்பியால் அடித்துத் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாகக் குற்றஞ்சாட்டிக் காங்கேசன் துறைப் பொலிசார் மல்லாகம் தற்காலிக நீதிபதி திரு. எஸ். இளையதம்பி முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரிக்காக ஆஜரான வழக்கறிஞர் திரு. எஸ். நடராசா நோயின் கஷ்டம் தாங்காமலே தற்கொலை செய்துகொள்ள முயன்றார் எனவும், அவரது செயல் தவறானதுதான் எனவும் நீதிபதியிடம் தெரிவித்தார்.

நீதிபதி எதிரியிடம் 'வாழ்க்கை அனுபவிப்பதற்காகவே எனவும் இன்பமானாலும், துன்பமானாலும் அனுபவித்தே ஆக வேண்டும் என்றும் கூறி, நான்கு மாதங்களுக்கு நூறு ரூபாய் நன்னடத்தைப் பிணையிற் செல்ல உத்தரவிட்டார்.

கந்தரோடையைச் சேர்ந்த சின்னப்பு கந்தசாமி வெட்டுக்கத்தியால் தமது கழுத்தை வெட்டித் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாக சுன்னாகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டு மல்லாகம் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். மாஜிஸ்டிரேட் பாதுகாவலரிடம் அறிக்கை சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டு தமது தீர்ப்பை இம்மாதம் 15-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

## தந்திக் கம்பி களவு

அவிசாவலை, திங்கள்

கொழும்பு — இரத்தினபுரி தந்திப்பாதையில் அளுத்தம்பலம் என்ற இடத்தில் 2000 ரூத்தல் தந்திக் கம்பிகள் களவாடப்பட்டுள்ளன. இதனால் 14 முக்கிய பாதைகளில் உள்ள தந்திச்சேவை துண்டிக்கப்பட்டிருக்கிறது. களவாடப்பட்ட தந்திக்கம்பிகள் 3,000 ரூபா பெறுமதியுள்ளதாக மதிப்பிடப்படுகிறது. ஐந்து தந்திக் கம்பிகளை அறுத்து, அவற்றில் இருந்த கம்பிகள் களவாடியிருப்பதாகத் தெரிகிறது. துண்டிக்கப்பட்டிருக்கும் தந்திப் போக்குவரத்தைச் சீர்படுத்துவதற்கு அவிசாவலை தந்திப் போக்குவரத்து அதிகாரிகள் துரிதமாகச் செயலாற்றி வருகிறார்கள்.

---

## பயனில்லாத இலாகா

கொழும்பு, திங்கள்

வானிலை அவதான இலாகாவில் உள்ள பட்டதாரிகளை வேலையிலிருந்தும் நிறுத்தி வைப்பதால், இலாகாவின் மனித சக்தி குறைவதுடன், இதற்கெனப் பயிற்றப்பட்ட உத்தியோகஸ்தர்களும் பயனற்றவர்களாகி விடுவார்கள் என வானிலை அவதானிகள் சங்கம் கல்வி மந்திரிக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளது. மற்ற நாடுகளில் வானிலை அவதான இலாகா விவசாய, கைத்தொழில் வளர்ச்சிகளுக்கு உதவி செய்து வருவதாயும் ஆனால் இலங்கையில் வானிலை அவதான இலாகா இவ்வித அபிவிருத்திக்கு மிகவும் குறைந்த அளவிலேயே சேவை செய்துள்ளதாகவும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

---

## தும்புக் கைத்தொழில் அபிவிருத்தி செய்யப்படும்

— மந்திரி

காலி, திங்கள்

அக்குரஸ, நக்குவனை, பலாங்கொடை ஆகிய இடங்களுக்கு மின்சாரம் விநியோகம் செய்யப்படும்போது காலிப் பகுதிக்கு தேவைக்கு மீதியான மின்சாரம் கிடைக்கும். தேவைக்கு மிகுதியாக இருக்கும் மின்சாரம் தும்பு திரிக்கும் இயந்திரங்களை இயக்குவதற்குப் பயன் படுத்தப்படும்.'

காலிப்பகுதி தும்புத் தொழில் கழகம், மின்சார, காணி, விவசாய மந்திரி திரு. சி. பி. டி' சில்வாவைப் பேட்டி கண்டபோது மந்திரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேட்டியின்போது மந்திரி மேலும் தெரிவித்ததாவது:

எஸ். எஸ். சி. சித்தியடைந்த யுவதிகள் தும்புத்தொழிலில் ஈடுபட அக்கறை கொள்கிறார்களில்லை. பழைய தொழிலாளர்கள் வேலையை விட்டுவிட்டால் தும்புத்தொழிலே ஸ்தம்பித்துவிடலாம் என அஞ்சப்படுகிறது எனவே இதற்கான இயந்திரங்கள் அவசியம் தேவைப்படுகின்றன. எமது தும்புக்கு பர்மா அதிக விலை கொடுத்து வாங்குகிறது. வெளிநாடுகளுக்கு ஒப்பந்தம் மூலம் நாம் தும்பை விற்றால் திருப்திகரமான அளவிற்கு தும்புத்தொழிலில் லாபமடையலாம். எனவே அரசாங்கம் தும்புத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு அதிக முயற்சி செய்யும்.

காலி மாவட்டத்தில் தும்புக் கைத்தொழில் மிகவும் சீரழிந்துள்ளதாக தூதுகோஷ்டி மந்திரியிடம் முறையிட்டது.

---

## அமைச்சருக்கு கட்சிக்கிளை நன்றி

யாழ்ப்பாணம், திங்கள்

காங்கேசன்துறையில் மக்கள் வங்கிக் கிளையை திறந்து வைக்க முயற்சியெடுத்த உணவு வர்த்தக அமைச்சருக்கு நன்றி தெரிவித்து இலங்கை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க காங்கேசன்துறைக் கிளை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

காங்கேசன்துறை நியூ லிபேட்டி படமாளிகையில் டாக்டர் சு. வே. சீனிவாசகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. கே. ஏ. இலங்கைநாயகம், இணைச் செயலாளர்கள்: திரு. இ. ஆனந்தன், திரு. தி. கு. மாலெஸ்; பொருளாளர்: திரு. ச. சிவானந்தன்

நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

## அரசாங்க வேலை கிடைக்கும்

கொழும்பு, திங்கள்

அரசாங்க இலாகாக்களிலிருந்து மத்திய தொழில் பதிவுக்கந்தோர் மூலம் வெளியாகும் வெற்றிடங்களுக்காக விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படும்போது அவர்களில் 25 சதவிகிதத்தினர் கட்டுநாயக்கா, திருக்கோணமலை ஆகிய தளங்கள் தேசிய மயமாக்கப்பட்டதானல் வேலை இழந்தோராக இருக்கவேண்டும் என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பிரிட்டிஷ் தளங்களில் நிரந்தரமாகச் சேவை செய்து பின்னர் அரசாங்கத்தில் தற்காலிகமாகச் சேவை செய்தவர்களை நிரந்தர அரசாங்க உத்தியோகஸ்தர்களாக்குவது என அரசாங்கம் முன்னரே முடிவு செய்திருந்தது.

# "நவீனவசதிகளுடன் படைகளைப்பலப்படுத்த வேண்டியது அவசியம்"

## அலகபாத்தில் நேரு விளக்கம்

### 10,000 சதுரமைல் பரப்பை செப்டம்பர் 8-ந் திகதிக்குப்பின் சீனு விழுங்கிவிட்டது

### ஷாங்காயில் பிரதமர் சிறிமாவுக்கு வரவேற்பு

அலகபாத், ஜனவரி 7

"இந்தியா யுத்தத்தை விரும்பவில்லை. இந்த யுகத்தில் யுத்தம் என்பது மனிதவர்க்கத்தின் அழிவுதான். எந்தப் பிரச்னைக்கும் சமாதானத் தீர்வுகாணவேண்டுமென்பதே இந்தியாவின் விருப்பம். ஆனல் சமாதானம் தன்மானத்தையும் கௌரவத்தையும் விட்டுக்கொடுத்துப் பெறுவதல்ல. அதை இந்தியா விரும்பவில்லை. சீனுவுடன் இப்பொழுது சண்டை நடைபெறவில்லையாயினும் சீனு மீண்டும் இந்தியாவைத் தாக்கமாட்டாது என்று நம்புவதற்கில்லை. எனவே நாம் நமது யுத்த முயற்சிகளைத் தளர்த்திவிடக்கூடாது. நமது படைகளை நவீன சாதனங்களைக் கொடுத்து பலப்படுத்தவேண்டியது அவசியம்" என்று இந்தியப் பிரதமர் நேரு தமது தொகுதியான அலகபாத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## கொழும்பு மகாநாடுபற்றி நேரு

கொழும்பில் கூடிய ஆறு ஆசிய ஆபிரிக்க நடுநிலைமை நாடுகளின் மகாநாடுபற்றி பிரதமர் நேரு குறிப்பிடுகையில் இந்தியா எவருடைய யோசனையையும் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறதென்றும் எந்தச் சமரச யோசனையும் இந்தியாவின் கௌரவத்துக்கு இழுக்குத்தேடாதவரையில் அதை இந்தியா ஏற்றுக்கொள்ளுமென்றும் பிரதமர் நேரு கூறினர். பாகிஸ்தான்பற்றிப் பிரதமர் குறிப்பிடுகையில் மிக நெருங்கிய அயல்நாடான பாகிஸ்தானுடன் இந்தியா சமாதானமாக வாழாமல் இருக்கமுடியாதென்று: பாகிஸ்தானுடன் சமாதானமாக வாழவே விரும்புகிறதென்றும் கூறினர். இக்கூட்டத்தில் தேசிய பாதுகாப்பு நிதிக்கு 6615 கிராம் தங்கமும் தங்க நகைகளும் பிரதமரிடம் வழங்கப்பட்டது.

## மொரார்ஜி எடைக்கு இரட்டிப்புத் தங்கம்

ராஜஸ்தானிலுள்ள கங்கா நகர் என்ற ஜில்லா இந்திய நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாயின் எடைக்கு இரண்டு மடங்கு தங்கத்தை நிதிமந்திரியிடம் கொடுத்தது. பிரதமர் நேருவின் எடைக்கும் திருமதி இந்திரா காந்தியின் எடைக்கும் சரியாக தங்கம் கொடுக்கப்படுமென்றும் இவ்வைபவத்தில் அறிவிக்கப்பட்டது. தங்கத்தைப் பெற்றுக்கொண்ட நிதிமந்திரி திரு மொரார்ஜி தேசாய் பேசுகையில் நாட்டில் வேறு எந்த ஜில்லாவைக் காட்டிலும் அதிக அளவில் தேசிய பாதுகாப்பு நிதிக்கு தங்கம் கொடுத்த பெருமை கங்கா நகர் கிராமத்தையே சாரும் என்று கூறினர். திருமணம் மற்றும் சடங்கு வைபவங்களுக்கு தங்கத்தை வீணாக்கக்கூடாதென்றும் தங்கத்தைப் பதுக்கக்கூடாதென்றும் நிதிமந்திரி கூறினர். சீன நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டதென்றும் இனி சீனவை நம்பவேகூடாதென்றும் நிதிமந்திரி கூறினர். கங்கா நகரில் ஆயிரம் ரூபாய் ரொக்கப்பணமும் 450 கிராம் எடையுள்ள தங்க வாளும் அளிக்கப்பட்டது. கான்பூர் ஜில்லாவில் இரண்டு லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

## தி. மு. க. தலைவர் வேண்டுகோள்

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. சி. என். அண்ணுதுரை நேற்று மதுரையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் நாட்டின் பாதுகாப்பு முயற்சிகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இக்கூட்டத்தில் தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஐயாயிரம் ரூபாய் சேர்ந்தது.

## தெலுங்கு எழுத்தாளருக்கு மந்திரி யோசனை

நெருக்கடியான இச்சமயத்தில் நாட்டு மக்களுக்கு உணர்ச்சியூட்டவல்ல இலக்கியங்களைப் படைக்கவேண்டுமென்று தகவல் மந்திரி டாக்டர் கோபாலரெட்டி தெலுங்கு எழுத்தாளர்களைக் கேட்டுக்கொண்டார். ராஜமகேந்திரபுரத்தில் நடைபெற்ற அகில பாரத தெலுங்கு எழுத்தாளர் மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய மந்திரி கோபாலரெட்டி மக்களுக்கு உணர்ச்சியூட்டும் இலக்கியங்களை இதர மொழிகளைச் சேர்ந்த இலக்கிய கர்த்தாக்கள் பலர் சிருஷ்டித்துள்ளதாகக் குறிப்பிட்டு இவர்களைப்போல் தெலுங்கு எழுத்தாளர்களும் தங்கள் படைப்புக்களைப் பயன்படுத்தவேண்டுமென்ருர்.

## ராஷ்டிரபதி பாட்ன செல்கிருர்

சேலத்துக்குச் சென்றிருந்த ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் நேற்றிரவு சேலத்திலிருந்து சென்னைக்குத் திரும்பினர். இன்று அவர் பாட்னவுக்குச் செல்கிருர். மத்திய பிரதேச முதன் மந்திரி அமிர்தசரஸில் நேற்று ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் போரில் மாண்ட ஜவான்களின் குடும்பங்களுக்கு நிலம் வழங்கும் விஷயம்பற்றி தமது அரசாங்கம் பரிவுடன் ஆராய்ந்துவருவதாகக் கூறினர். ராணிட்பூர் முனிசிபல் சபை நடத்திய வெற்றி வாக்கெடுப்பில் 23,000 ரூபாய் கிடைத்தது. காதணிகள் உட்பட மற்றும் தங்க நகைகளும் கிடைத்தன. ஜாங்பா ஜில்லாவில் இரண்டு லட்சத்து பதினேராயிரம் ரூபாயும் 600 கிராம் தங்கமும் வசூலானது.

## ஷாங்காயில் பிரதமர் சிறிமா

இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சீனப் பிரதமர் சூ-என்-லாயுடன் ஷாங்காய் வந்துசேர்ந்தார். மற்றொரு விமானத்தில் இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோ சீன உதவிப் பிரதமர் மார்ஷல் சென்யியுடன் வந்துசேர்ந்தார். அவர்களை ஷாங்காய் மேயரும் மற்றும் பெருந்திரளான மக்களும் வரவேற்றனர். பின்னர் ஷாங்காய் மேயர் அளித்த விருந்துபசாரமொன்றில் பிரதமர் சிறிமாவும் டாக்டர் சுபந்திரியோவும் பேசுகையில் சீன - இந்திய எல்லைத் தகராறு அமைதியான முறையில் தீர்ந்துவிடுமென நம்பிக்கை தெரிவித்தார்.

## 10,000 மைல் பரப்பை இந்தியா இழந்தது

1962-ம் ஆண்டு செப்டம்பர் 8-ந் திகதிக்குப் பின் இந்தியப் பிரதேசத்தில் பத்தாயிரம் மைல் பரப்புக்குமேல் சீன பிடித்துக்கொண்டுள்ளதாக சீனவுக்கு இந்தியா அனுப்பியுள்ள ஒரு குறிப்பில் குற்றம்சாட்டியுள்ளது.

# எலிஸபெத்வில்லியில் 500பேர்கொல்லப்பட்டனர்

## ஐ. நா. அதிகாரிகள் தலைநகர் சென்றனர்

எலிஸபெத்வில்லி, ஜன. 7

ஜடோட்வில்லியிலிருந்து கொல்வேஸியை நோக்கிச் செல்லவேண்டாமென்று கடாங்காவிலுள்ள ஐ. நா. படைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஜடோட்வில்லியிலுள்ள ஐ. நா. விமானநிலையத்தை ஐ.நா.துருப்புக்கள் காவல்புரிந்து வருவதைத் தவிர அங்கு வேறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை.

ஐ. நா. தலைமைக் காரியதரிசியின் விசேஷ பிரதிநிதி டாக்டர் ரால்ப்பஞ்ச் கடாங்கா சம்பந்தமான நடவடிக்கைகளை நேரில் அறிவதற்காக லியப்போல்ட் வில்லியிலிருந்து எலிஸபெத்வில்லிக்குச் சென்றுள்ளார். அவருடன் காங்கோ நடவடிக்கைப் பிரிவின் அதிகாரி டாக்டர் ரொபர்ட் கார்டினரும் சென்றுள்ளார்.

இவர்களிருவரும் கடாங்கா அதிபர் ஷோம்பேயைச் சந்திக்கக்கூடுமென அறியப்படுகிறது.

### கடாங்கா வேண்டுகோள்

கடாங்கா மக்களுக்கு உதவி செய்யும்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தையும் இதர நாடுகளையும் கடாங்கா நிர்வாகம் கோட்டுள்ளது. கடாங்கா மக்கள் பீதியடைந்து தங்கள் வீடுவாசல்களை விட்டு வெளியேறிச் சென்றுகொண்டிருக்கிறார்களென்றும் ஒரு நேரக்கஞ்சிக்கும் வழியில்லாமல் பட்டினியால் வாடுகிருர்களென்றும் கடாங்கா நிர்வாகம் விடுத்த வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது.

ஐ. நா. நடவடிக்கையின் போது சுமார் 500 கடாங்கா மக்கள் கொல்லப்பட்டார்களென்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

எலிஸபெத் வில்லியிலிருந்து தென்ரொடீஷியத் தலைநகரான ஸாலிஸ்பரிக்கு வந்துசேர்ந்த மோட்டார்கார் கம்பனி பிரதிநிதி பொருவர் எலிஸபெத்வில்லியில் மக்கள் பட்டினியால் வாடுகிருர்களென்றும் "ஒருதுண்டு அப்பத்துக்கு அடிபிடிப்படுகிருர்கள்" என்றும் தெரிவித்தார். ஐ. நா. படையைச் சேர்ந்த எதியோப்பியத்துருப்புக்கள் கடாங்கா மக்களைக் கொடுமைப்படுத்தியதாகவும் அவர் கூறினர்.

## எக்ஸ்பிரஸ் ரயிலில் சடலம்

### ஊட்டி சென்றவர் இறந்து கிடந்தார்

கோயம்புத்தூர், ஜன. 7

பம்பாயிலுள்ள 'இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ரீஸ்' ஸ்தாபனத்தைச்சேர்ந்த உத்தியோகத்தரான திரு. ரோலண்ட் ஸ்மித் என்பவருடைய மனைவியான (45 வயது) திருமதி பட்ரீஸியா ஸ்மித், எக்ஸ்பிரஸ் ரயில் வண்டியில் முதல்வகுப்புப் பெட்டியில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

திருமதி ஸ்மித் உதகமண்டலம் செல்வதற்காக சென்னையிலிருந்து மேட்டுப்பாளையத்துக்குப் பிரயாணம் செய்துகொண்டிருந்தாரென்றும் அவர் பிரயாணம் செய்தமுதல் வகுப்புப் பெட்டியில் வேறும் இருவர் பிரயாணம் செய்தனரென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அரக்கோணத்தில் திருமதி ஸ்மித் இரவு உணவு உண்டபின் நித்திரைக்குச் சென்ருரென்றும் கோயம்புத்தூர் சந்திப்பில் அவரைத் தாங்கள் எழுப்ப முயன்று முடியாமல் போகவே தாங்கள் பொலிசாருக்குத் தெரிவித்ததாகவும் அந்தப் பெட்டியில் பிரயாணம் செய்தவர்கள் கூறியதாகப் பொலிஸார் கூறினர்.

திருமதி ஸ்மித்தின் சடலம் கோயம்புத்தூர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத பரிசோதனை நடைபெற்றது. இதன்பின் சடலம் சென்னைக்கு அனுப்பப்பட்டது. பொலிஸார் தொடர்ந்து புலன் விசாரணை செய்கின்றனர்.

## மே. வங்கத்துக்கு ரூ. 2000 கோடி முதலீடு

புதுடில்லி, ஜன. 6

மேற்கு வங்காளத்தின் அபிவிருத்திக்கு 10 வருடங்களில் ரூ 2000 கோடி முதலீடு செய்யவேண்டும் என இந்தியப் பொருளாதார நிபுணர் டாக்டர் லோகநாதன் சிபார்சு செய்திருக்கிருர். அவ்வாறு செய்தால் மக்களின் சராசரி வருமானம் ஆண்டு ஒன்றுக்கு 7.4 சத விகிதம் உயரும் என அவர் கூறியிருக்கிருர்.

## பி. கே. நேரு

பாரிஸ், ஜன. 6

அமெரிக்காவிலுள்ள இந்திய ஸ்தானிகர் திரு. பி. கே. நேரு, டில்லி திரும்பும் வழியில் இன்று பாரிஸ் வந்தார்.

## இஸ்லாமிய ஐக்கியமுன்னணி

திருமலை, ஞாயிறு

இஸ்லாமிய ஐக்கிய முன்னணி ஒன்று அமைப்பதற்காக கிண்ணியாவைச் சேர்ந்த முனையச்சேனை மதுரசு மண்டபத்தில் ஒருகூட்டம் நடைபெற்றது. முஸ்லிம் பிரமுகரான ஜனப் முகமதனிபா மௌலவி கூட்டத்துக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் முஸ்லிம்கள் எல்லா இடங்களிலும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்று கூறினர். அடுத்து புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: ஜனப் வாப்புத்தம்பி ஹாஜியார், ஜனப் முகமுகமதனிபா, தலைவர்: ஜனப் எம். அபுசாலி, உபதலைவர்: ஜனப் ஆமீது, செயலாளர்: ஜனப் வாகிது, உபசெயலாளர்: ஜனப் வா. அப்துல்றகீம், பொருளாளர்: ஜனப் [illegible]தீன்.

## செக். அதிபர் ஜாகர்த்தா விஜயம்

ஜாகர்த்தா, ஜன. 7

செக்கோஸ்லவாக்கிய அதிபர் இம்மாதம் 12-ந் திகதி ஜாகர்த்தாவுக்கு வருவார். இந்தோனேஷிய ஜனதிபதியின் அழைப்பின்பேரில் வரும் இவர் இம்மாதம் 18-ம் திகதிவரை இங்கு சுற்றுப்பிரயாணம் செய்வார்.

### மணி வாசகு

'ஊழிமுதல்வனாய்
நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே
பாடேலோ ரெம்பாவாய்'.
—திருவாசகம்.

ஈழநாடு

EELANADU. National Tami Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு மார்கழி மீ 24ஆ (8-1-63)

## விவேகமற்ற முடிவு

கோப்பாய் ஆசிரியகலாசாலை மூடப்படமாட்டாதென்ற செய்தியைக் கேட்டு மக்கள் ஓரளவுக்கு மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் அதேவேளையில், திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையையும் நல்லூர் ஆசிரியகலாசாலையையும் மூடிவிடுவதெனக் கல்வி மந்திரி செய்துள்ள தீர்மானம் பேரிடி போல் வந்துள்ளது. தலைவலி போய் திருகுவலி வந்த கதையாக இருக்கின்றது கல்வி மந்திரி செய்துள்ள இந்த முடிபு.

ஒருசமூகத்தினருக்கு நன்மையளித்துவரும் கலாசாலைகளை அரசாங்கம் மூடுவதெனத் தீர்மானிப்பது நாட்டிலே பாரம்பரியமான கல்விச்சூழ்நிலையையே பூண்டோடு அழிப்பதாகும். பாரம்பரியமாகக் கிடைத்துவரும் கல்விச் செல்வத்தை வெறும் கட்டடங்கள் காத்துக்கொள்ள முடியாது. இச்செல்வமானது நீண்டகாலப் பயிற்சியில் உருவாகி வருவதொன்று. மக்களின் தேவைக்கேற்ப உடனுக்குடன் உற்பத்தி செய்யும் பொருளல்ல அது. ஆசிரிய கலாசாலையானலும்சரி, சாதாரண பள்ளிக்கூடங்களானலும் சரி அவற்றை மூடினல் திரும்பவும் அந்தப் பாரம்பரியத்தை ஆக்கவே முடியாது.

திருநெல்வேலியிலுள்ள சைவாசிரியகலாசாலை இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் எத்தனையோ எதிர்ப்புகளைத் தாண்டி இந்துக்களுக்கென நிறுவப்பெற்றது. இதன் பேருக வேறு சமயத்தினருக்கும் ஆசிரியகலாசாலைகளை நிறுவும் வாய்ப்புக்கிடைத்தது. இக்கலாசாலைகளெல்லாம் தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு வரபிரசாதமாயிற்று. தென்னிலங்கையிலுள்ளவர்கள் இத்தகைய தேவைகளைப்பற்றிச் சிந்தியா திருந்தகாலத்திலேயே கல்வி வளர்த்திக்காக அரசினரின் உதவியுடன் வடஇலங்கையிலுள்ளவர்கள் அயராது உழைத்து வந்தனர். இவற்றை எல்லாம் எண்ணிப்பாராது நினைத்த மாத்திரத்திலே திருநெல்வேலி, நல்லூர் கலாசாலைகளை மூடுவதெனக் கல்விமந்திரியார் தீர்மானித்திருப்பது ஒரு விளையாட்டுப்போலவே தோன்றுகின்றது!

பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் பலர் வேலைவாய்ப்புக்கள் இன்றி வீட்டிலே இருப்பதால் ஒருசில ஆசிரியகலாசாலைகளை மூடவேண்டியிருக்கின்றதென அரசாங்கம் சமாதானம் கூறக்கூடும். இப்படிப் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் வீட்டுக்கு பாரமாக இருப்பதை உணர்ந்தும், எஸ். எஸ். ஸி. பரீட்சையிற் சித்திபெற்றவர்களை அரசினர் ஆசிரியர்களாக நியமித்திருப்பது விந்தையாகவே இருக்கின்றது.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையைமாற்றுவதென்று செய்த முடிவை அதனை நேரில் பார்த்தபின் தாம் மாற்றிவிட்டதாகக் கல்விமந்திரியார் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். தாம் முன்னர் செய்த முடிவு தவருனதென்பதையும் அவர் ஒப்புக்கொள்ளுகின்றார். ஒருவேளை திருநெல்வேலியிலும் நல்லூரிலுமுள்ள கலாசாலைகளையும் நேரிற் பார்த்து அவற்றின் மகத்தான வரலாறுகளை அறிந்தபின்னர் அக்கலாசாலைகளையும் மூடுவதெனத் தாம் தீர்மானித்தது பெருந்தவறென மந்திரியார் உணரக்கூடும்.

மக்கள் தெரிவுசெய்துள்ள பிரதிநிதிகளைக் கலந்து ஆலோசியாமல் இத்தகைய விஷயங்களில் திடீரென மந்திரியார் இறங்குவது விவேகமுள்ள செயலாகத் தொன்றவில்லை.

கோப்பாய்க் கலாசாலையை மூடிவிட்டு அதே இடத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள கல்விக் காரியாலயத்தை மாற்றுவதென அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. எண்ணியபடி இது நடவாதபடியால் ஒருவேளை யாழ்ப்பாணத்திலுள்ள கல்விக் காரியாலயத்தை இனித் திருநெல்வேலிக்கு அல்லது நல்லூருக்கு மாற்றவும் அரசாங்கம் எண்ணக்கூடும். இதற்காக நாட்டுக்கு நற்பயன் அளித்து வரும் கலாசாலைகளை மூடுவது புத்தியாகாது. கல்வி வளர்ச்சிக்குத் தடையாகவுள்ள எந்தச்செயல்களையும், தீர்மானங்களையும் ஆசிரிய உலகம் பொதுமக்களின் ஆதரவுடன் எதிர்த்தே தீரும். எனவே இக்கலாசாலைகளை மூடுவதெனச் செய்துள்ள முடிவையும் மந்திரியார் மாற்றிக்கொள்வார் என்றே நம்புகின்றேம்.

# கேதீச்சரத்தில் திருவாசக விழா

— ஐயாறன் எழுதுவது —

தனியாகப் பிரயாணம் செய்வதைவிட, நல்ல துணைகிடைத்தால், பிரயாணம் அதிக இன்பமாகிறதல்லவா? கேதீச்சரம் செல்ல கி. வா. ஜ.வின் துணை எனக்குக் கிடைத்தது. வழிநெடுக பேச்சுத்தான். அவருடைய வாழ்க்கை அனுபவமெல்லாம் கேட்டுவந்தேன். அவர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மோகனூராம். சிறுவயதிலேயே பக்கத்திலுள்ள காந்தா மலையிலுள்ள முருகன் கோவிலில் சென்று தனித்திருந்து தியானம் செய்வாராம். காயத்ரிஜபம் 'அக்ஷர லட்சம்' செய்திருக்கின்ருராம். அதாவது காயத்ரி மந்திரத்தில் மொத்தம் 24 எழுத்துக்கள். 24 லட்சம் காயத்ரிஜபத்தை அந்தக்கோவிலில் பலநாட்கள் தொடர்ந்து சென்று செய்துள்ளாராம். இதனல் என்னபயன் தெரியுமா? ஏகாக்கிரசித்தம் மனம் குவிந்து எந்தக்காரியத்தையும் செய்யமுடிவதாயும், தாம் எழுதுகையில், தம் கவனம் வேறெங்கும் செல்லாதபடியும், அழித்தல் திருத்தல் இன்றி எழுதவும் முடிகிறதென்றும் தெரிவித்தார்.

அந்தச் சிறுவயதிலேயே முருகனுக்குப் பாமாலைபாடிச் சூட்டுவதுண்டாம். துறவுபூண விரும்பியும், அது கைகூடவில்லை. பலபத்திரிகைகளிலும் அவரது பாட்டுகள் வெளியாயின. திரு. வி. க.வின் நல்லுறவு கிடைத்தது. முறையாகத் தமிழ் படிக்கவேண்டுமென்ற ஆவல்தோன்றி, மகாமகோபாத்யாய சாமிநாத அய்யர்வாளை அணுகி, அவருடன் 16 வருடங்களிருந்தார். முதலில் "கலைமகள்" ஆபீஸில் 30ரூபாய்தான்சம்பளம். வேலைநேரம் போக மற்றநேரமெல்லாம் அய்யர்வாளுடன்தான். குறிப்புக்களைமட்டும் கேட்டு, அவரது சுயசரித்திரமுள்ளிட்டு, பல நூல்களையும் எழுதியது கி. வா. ஜ. தானம். இடையே அதிக வேதனத்தில் வேலை கிடைப்பதாயிருந்தும், குருவும் சிஷ்யனும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிய மனமில்லை. குருவின மறைவுக்குப்பின் இரண்டுவருடம் கழித்தே, மேடைகளில் பேசவும் புத்தகம் எழுதவும் முன்வந்தாராம் கி. வ. ஜ இதுவரை 130 புத்தகங்கள்எழுதி வெளிட்டுள்ளாராம். திருவருளை இவ்விதம் பூரணமாகப் பெற்று குருகுலவாச முறையில் தமிழ் பயின்றவர் இதுபோல் இககாலத்தில் எவ்வளவுபேர்? இந்த மேலானமுறை மீண்டும் ஏற்படமுடியுமா?

எந்தக் கூட்டத்தில் பேசுகையிலும், முதலில் முருகன் மீதும் அடுத்தபடி தம் குருநாதர்மீதும் துதிப்பாடல்பாடுகிருர். இப்படிப் பாடுவானேன் என்று கேட்டதற்கு, அய்யர்வாளும், முருகன்மீதும், அவரது குருவான மீனுட்சிசுந்தரம் பிள்ளைவாள்மீதும் துதிபாடிவிட்டே பேசுவாரென்ருர். வழிவழியான இவ்வித குருபகதி இக்காலத்து மாணவர்களில் எவ்வளவுபேருக்குஉண்டு? கற்றதனுல் ஆயபயன் அநேகமாக வேண்டியில்லாமல் திண்டாடுவதாக இருக்கிறது. என்ன செய்யலாம்!

* * *

வழிநெடுக மழை. இரவு ஏழு மணிக்கு வவுனியா வந்து சேர்ந்தோம். அங்கு நகரமண்டபத்தில் பெரிய கூட்டம். 'வவனியாச் சிங்கம்' சுந்தரலிங்கத்தாரின் 'கர்ஜனை' கேட்டது. வவனியாவிலே பிரபல வர்த்தகரான முகமது என்பவருக்கு ஜே. பி. பட்டம் கிடைத்துள்ளதாயும் அவரைப் பாராட்டவே கூட்டமென்றும்தெரிந்தது.

தாய்நாடான இந்தியாவிலிருந்துவந்து வர்த்தகம் செய்து, இங்கு குடியேறி பலதரப்பினரின் பாராட்டுதலையும் வாழ்த்தையும் அவர் பெறமுடிந்தது பெரிய காரியம். அக் கூட்டத்தில் ஒரு புத்தகிக்குவும் பேசினர். வெளியிலிருந்து இதெல்லாம்சற்றுகேட்டுவிட்டு, இஞ்னியர் வைததிலிங்கத்தார் வீட்டுக்குச் சென்ருேம். வவனியாவிலே அவர்வீடு ஓர் அன்புத் தமிழகமாகும். தமிழ்ப் பண்புக்கு அவர் ஓர் எடுத்துக்காட்டு. கட்டில்களை எங்களுக்குக் கொடுத்துவிட்டு, வேறு அறையில் கீழே படுத்தார் அந்த அன்புச் செம்மல். வாலிப வயதுள்ள அவர் வேலையிலிருந்து விலகுகிருராம் வவனியாவுக்கு அது ஈடுசெய்ய முடியாத பெரிய நஷ்டமாக இருக்குமே என்று கவலையாக இருந்தது. சுவாமி சுத்தானந்தபாரதியாரின் சீடரவர்.

அதிகாரியான அவரது வீட்டில் இராப்பகலாக குழாயில் நல்ல நீர் வருகிறது. மற்ற இடங்களில் அவ்விதமில்லை என்று பக்கத்திலிருந்த ஓர் அன்பர் கூறியதும் "இங்கு எஞ்சிய நீர்தான் வேறுஇடங்களுக்குக் கிடைக்குமோ?" என்று கி. வா ஜ. குறிப்பிட்டதும் ஒரே சிரிப்பு. இரவை அங்கு கழித்துவிட்டு, மறுநாள் விடியற்காலை, திருக்கேதீச்சரம் புறப்பட்டோம்.

* *

வழியிலே முருகன்மீது திருப்பள்ளிஎழுச்சியை கி. வா. ஜ. பாடிக் கொண்டு வந்தார். சுமார் இருபது பாடல்களிருக்கும். புதிதாக இருந்தன. இவை யார் பாடியவை என்று கேட்டதற்கு கி வா. ஜ. சிரித்தார். என்தவறை உணர்ந்தேன் நினைத்ததும் கவிபாடக்கூடியவர் என்பதும் பின்புதான் நினைப்பு வந்தது. காரிலேயே ரேடியோ. செம்பனர் கோவிலின் இனிமையான நாகசுரம். பின்னர் செய்திகள். வாழ்க்கையை இன்பமாக்க விஞ்ஞானம் எவ்வளவெல்லாம் உதவுகிறது! ஆனல் இந்த இன்பமெல்லாம் ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்து, மற்றவர்களுக்கு மறுக்கப்படுவதிலேதானே சங்கடங்கள். இவ்வித இன்பம் எல்லாருக்குமே கிடைக்கக் கூடியதாகச் செய்ய முடியாதா? விஞ்ஞானத்தை அழிக்கும் வேலைகளுக்கன்றி, ஆக்கவேலைகளுக்கு மட்டுமே பயன்படுத்த முடிவதாயின், உலகமெல்லாம் இன்பமே சூழவும் எல்லோரும் வாழவும் முடியுமல்லவா?

* * *

நேரம் போனதே தெரியவில்லை. பாலாவியின் கரைவழியாக திருக்கேதீச்சரம் வந்துவிட்டோம். திருவாசக மடத்திலே அச்சமயம் வேத பாராயணம் நடந்து கொண்டிருந்தது. பல அந்தணச்சிறுவர்கள், ஒருமையுடன் வேத கோஷங்கள் செய்த காட்சி என்மனதைக் கவர்ந்தது. இவ்விதமான காட்சியை இதுவரை ஈழத்திலே கண்டதில்லை.

சுமார் மூன்ருண்டுகளுக்கு முன் கேதீச்சரம வந்திருந்த போது, குருகுலம் ஒன்று ஆரம்பிக்க அஸ்திவாரக்கல் போடப்பட்டிருந்ததைப் பார்த்தேன். வேதம், ஆகமம் முதலியவற்றை கற்பித்து,கோவில் பூசகர்களுக்கான பயிற்சி அளிக்க ஒழுங்கு செய்துள்ளதாக திருப்பணிச்சபைத் தலைவர் கூறியிருந்தார். ஆனல் எனக்கோ இதுபற்றி அதிக நம்பிக்கை இல்லாமலிருந்தது. பூசாரி தொழில் வேண்டாமென்று குருக்கள்மார்களில் பலர் கூறும் காலமிது. வருமானம், மதிப்பு, மரியாதை

(5-ம் பக்கம் பார்க்க)

# தெவிட்டா இன்பருளும் திருவெம்பாவை

## திருவாசகத் தேன்மொழி விளக்கம்

— க. வை ஆ. சர்மா —
(7-1-63 இன் தொடர்ச்சி)

### பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்தமடு

பைங்குவளைக் கார்மலரால்
செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்
னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து
சார்தலினல்
எங்கள் பிராட்டியும் எங்
கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து
பாய்ந்து நஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு
கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக்
குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்
தாடேலோம் ரெம்பாவாய்.

இப் பாடலில் பெரிய நீர்நிலையாகிய மடுவுக்கும், சிவபிரானுக்கும், உமாதேவியாருக்கும் ஒப்புவமை கூறுகின்ருர். மடுவிலே கருங்குவளையும் செந்தாமரையும் பூத்திருக்கின்றன. அது செம்பவளத்திருமேனியண்ணலையும், நீலநிறத் திருமாதா ஆகிய இறைவியையும் நினைவூட்டுகின்றது. அழகிய பறவை இனங்கள் மடுவில் வந்து படிந்துள்ளன. குருக்கத்தி மலர் இறைவன் திருமுடி சேர்வதால் அழகுபெறுகிறது. வளையல்கள் உமையம்மை திருக்கரங்களில் விளங்குகின்றன. மடுவில் நீர் அலைகள் மோதி ஆர்ப்பரிக்கின்றன. இறைவனிடத்தும் இறைவியிடத்தும் பின்னிப் பிணைந்த பாம்புகள் அணிகளாக அமைந்துள்ளன. தங்கள் உடம்பிலுள்ள அழுக்கைப் போக்க நினைப்பவர் மடுவைச் சேருகிருர்கள். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலப் பிணியைப் போக்க விரும்புவோர் இறைவனையும் இறைவியையும் வந்து சேவிப்பர். இந்த ஒப்பனைகளால் எங்கள் அம்மையப்பர்போலப் பொங்கி விளங்கும் மடுவிலே புகுந்து நீந்தி, சித்திரப்பாவை போன்ற சகியே! பரம்பொருளைச் சார்ந்த சிந்தனையுடன் சங்க வளையல்கள் ஒலிக்கவும் காற்சிலம்புகள் கலீரென ஓசையிடவும், மார்பகம் பூரிப்படையவும், நீரானது கீழ் மேலாகப் பொங்கி எழவும் அழகிய செந்தாமரைத் தடாகத்தில் மூழ்கி நீராடுவாயாக.

### பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை

காதார் குழையாடப் பைம்பூண்
கலனாடக்
கோதை குழலாட வண்டின்
குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்
பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்
பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்
கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா
மாபாடி
பேதித்து நம்மை வளர்த்
தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி
ஆடேலோ ரெம்பாவாய்.

பதுமை போன்ற தோழி! உன் காதணியானவை அசையவும், பசிய பொன்னணிகள் ஆடவும், பூவைத்து முடித்த கூந்தல் அலையவும், அப்பூக்களில் படிந்த வண்டுகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து ரீங்காரஞ் செய்யவும், குளிர்ச்சி பொருந்திய நீரிலே மூழ்கி உன்னைத் தூயவளாக்கிய பின்பு, சிதாகாசப் பெருவெளியில் ஆனந்த நட்டமிடும் அம்பலத்தரசன் திருத்தோற்றமும் உன் சிந்தனையை நிறைக்க, வேதங்களின் உட்பொருளாயிருக்கும் சிவபிரானைக் குறித்துப் பாடும் பாடல்களில் அந்த வேதப்பொருளாயிருக்கும் விதத்தையும், பரஞ்சோதி வண்ணத்தையும், அப்பிரானது திருமுடியைச் சேர்வதனல் பேறுற்ற கொன்றைமலர் மாலையின் தகவையும், பெருமானது தனிமுதன்மையை

(5-ம் பக்கம் பார்க்க)

# ‘சோதனைகளை எதிர்த்து வெற்றி காண்பதே வாழ்வு’

## திருவாசக விழாவில் நீதிபதி தனபாலசிங்கம்

திருக்கேதீச்சரம், திங்கள் "இறையுணர்வு பெருகப் பெருக உடல் வாழ்க்கை அலுத்துவிடும். சமயத்துறையில் ஆத்மீக வளர்ச்சியே மிக முக்கியமானது கடவுளை தாயிற் சிறந்த தயவான தத்துவனாகவும் நம்மை நாயிற் கடையராகவும் கருதி எங்கும் அன்பு பரப்பவேண்டும்" என்று யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் அகில இலங்கை சிவனடியார் கூட்ட ஆதரவில் நடைபெற்ற திருவாசக விழா இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே மனத்தைக் கோயிலாக்கி உள்ளத்தில் இறைவனைக் கண்டது சைவ சமயம். இடர்கள் பல வரினும் மனம் தளர்ச்சியுறக்கூடாது. சோதனைகளை எதிர்த்து வெற்றிகாண்பதே வாழ்வின் இலட்சியமாக இருக்கவேண்டும். அரசாங்கம் இந்தியாவுக்குச் செல்லுவதற்கு 7 வருடத் தடை விதித்திருப்பதானது நன்மைகே என்று கருதவேண்டும். இந்தத் தடையுத்தரவு காரணமாக ஈழத்தில் உள்ள ஆலயங்கள் புத்துயிர் பெற்று வருகின்றன. புராதன பெருமைவாய்ந்த ஆலயங்களைப் புத்துயிரூட்டி சமய வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும்.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா பேசுகையில் சமய போதனைகளைச் சாதனைகளாக்க ஒவ்வொருவரும் முயலவேண்டும். வாழ்க்கை வேறு சமயம் வேறு என்று கருதுவது தவறானது. சமயமும் வாழ்க்கையும் ஒன்றோடொன்று இணைந்தவை என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி உதவி அதிகாரி திரு. அருள் தியாகராசா பேசுகையில 'வடமொழி துவேஷம் கூடாது. நமது மொழிக்குச் சிறப்புக்கொடுத்தல் அவசியமானது. நமது முன்னோர்கள் வாழ்ந்துகாட்டிய நெறிகளைப் பின்பற்றிச் சென்று உய்ய நாம் உழைக்கவேண்டும்' என்று குறிப்பிட்டார்.

செல்விகள் இ. தனலக்ஷ்மி இ. புவனேஸ்வரி ஆகியோர் திருவாசகப் பாடல்களைப் பாடினர்.

# ‘இறைவனை அடைய திருவாசகம் சிறந்தநூல்’

திருக்கேதீச்சரம், திங்கள் ‘ஆத்மீக வாழ்க்கைக்கு பணிவுடைமை வேணடும். ள்ளத்தில் உள்ள அழுக்குகளை அகற்றவே புறச் சாதனங்கள் உதவுகின்றன. அடியார் கூட்டச் சேர்க்கை அருளைப்பெற துணை செய்கின்றன. ஞான நிலையை உயர்வடையச்செய்து உய்தி தரக்கூடியது அடியார்க் கூட்டத்தைத் தவிர வேறில்லை.’ என்று முதலியார் செ. சின்னத்தம்பி இங்கு நடைபெற்ற திருவாசக விழா முதல் நாள் மாலை நிகழ்ச்சிகளிற் பேசும்போது கூறினர். பண்டிதர் திரு. க. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. சின்னததமபி மேலும் பேசியதாவது:-

‘வழிபாடுகள் பாவனையின் வளர்ச்சியே தவிர வேறில்லை. இறைவனை வழிபடுதலால் இறைவனுக்கு ஏதும் நன்மையில்லை என்பதனையும் வழிபாடுகள் எமக்கே நன்மையைத் தருகின்றன என்பதனையும் உணரவேண்டும். திருமுறைகளிடம் மக்கள் காட்டும் ஆர்வம் பெருகிவருவதினால் அவை தமக்குரிய சிறப்பை அடையும்காலம வெகு தூரத்திலில்லை. உபநிடதங்கள் வேதங்கள் உதித்த அதே அனுபவ நிலையிலேதான் திருமுறைகளும் தோன்றின. சைவ நூல்களில முதன்மையான இடம்பெறவேண்டியது திருவாசகமே. இறைவனை அடைய திருவாசகம் சிறந்த நூல். அது தெய்வீகத்தன்மை வாய்ந்தது. ஆச்சகர்கள் வடமொழியில் சேர்ச்சிபெற்றிருக்கவேண்டுவதுபோல சைவத் திருமுறைகளிலும் பயிற்சிபெறவேணடும். திருவாசகத்தைவிட எமக்கு உயர்ந்த நூல் எதுவும இல்லை.’

வித்துவான் கி. வா. ஜகந்நாதன தமது சொற்பொழிவில் குறிப்பிட்டதாவது:-

"திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்" தமிழ் மக்களின் உள்ளம் உருக்கமடையும் பண்புடையது. மேலைநாட்டைச் சேர்நத வணக்கத்திற்குரிய ஜீ. ஓ. போப் தமிழ்நாட்டிற்கு வந்து தமிழ் படித்தார். தமிழில் சிறப்பாக உள்ள திருவாசகத்தைப் படித்தார். அதில் நெஞ்சம்படிந்தார். திருவாசகம அவர் நெஞ்சை ஈர்த்தது. இது ஆங்கு இலமே என்று போப் கவலைப்பட்டார். திருவாசகத்திற்கு உருகினர். அயலான் ஒருவனை மயக்கியது திருவாசகம் எனின் எது எம்மை எத்தகைய தன்மையாக ஆக்கியிருக்கும். என்று சொல்லவேண்டியதில்லை. தம்மைத் தாழ்த்திக்கொள்ளுதல் உருக்கத்திற்குக் காரணமாகும். வாசகத்திற்கு மணிவாசகரும், அப்பரும் பெயர்பெற்று விளங்குகின்றார்கள். மணிவாசகர் அழுது பாடினர். நாம் பாடி அழுகின்றோம்.

ஆண்டவனின் திருவருளில் பற்று வைக்கின்றபோது பக்தன் அழவேண்டும். அவலத்தினல் அழும் அழுகை ஆண்டவன் அருள் பெற்றதும் ஆனந்தக் கண்ணீராக மாறுகிறது. உயிர்கள் திருந்தவே பிறவிகள் தரப்படுகின்றன. உள்ளம் பல எண்ணங்களைத் தரக்கூடியது.

மணிவாசகம் நமது உள்ளத்திலே நடைபோட வேண்டும். இதுவே நமது ஆனந்த வாழ்க்கைக்கு வழியாகும்.

பண்டிதா மு. ஆறுமுகன் பேசும் போது இளம் சமுதாயம் நல்ல முறையிலே உயர்ந்துகொள்ள வேண்டும. அடிப்படை ஒழுக்கங்கள் கற்பிக்கப் படவேண்டும். சமயம் கற்பிக்கும் முறையில் ஒழுக்கம் கடைப்பிடிககப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

சங்கீத பூஷணம் சி. வினசித்தம்பி இசை விருந்தளிததார்.

---

## வானொலியில் திருவாசக விழா

யாழ்ப்பாணம், செவ்வாய் திருக்கேதீச்சரத்தில் கடந்த வாரம் நடைபெற்ற திருவாசக விழா நிகழ்ச்சிகளின் ஒலிப்பதிவு வருகிற ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியிலிருந்து $7\frac{1}{2}$ மணிவரை இலங்கை வானொலி தமிழ் ஒலிபரப்பில் கேட்கலாம்.

காரைநகர் மணிவாசகர் விழா நிகழ்ச்சிகளின் ஒலிப்பதிவு வருகிற ஞாயிற்றுக்கிழமை இரவு $8\frac{1}{2}$ மணியிலிருந்து 9 மணிவரை ஒலிபரப்பப்படவிருக்கிறது.

# "முதல்வனைக் கொண்டதுசைவம்"

## திருவாசக விழாவில் பேச்சு

திருக்கேதீச்சரம், திங்கள் ‘உலகில் எல்லா உயிர்களும் மலர்ச்சி பெறவேண்டும். இதனையே சைவசமயம் வலியுறுத்துகிறது. பழமைமிக்கது சைவம். ஏனைய சமயங்களுக்கு கால எல்லையுண்டு. கற்பனைக்கும் காலத்திற்கும் எட்டாத கால அளவு உடைய முதல்வனைக் கொண்டதும் சைவ சமயமேயாகும்.’

இவ்வாறு குருநாக்கல் மாவட்ட நீதிபதி திரு. வே. க. கந்தசாமி இங்கு சனிக்கிழமை மாலை நடைபெற்ற திருவாசக விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

சைவத்திலே பிறப்பது ஊழ்வினைப்பயன் என்பது சான்றோர் கருத்து. வாழ்க்கையின் இலட்சியம் திருவருளைப் பெறுவதே ஆகலினல் சமயகுரவர்கள் நமக்கு வழிகாட்டியுள்ளனர். அவ்வழிச் சென்று உய்தல் எமது கடமையாகும். தமிழ் மொழிக்குள்ள சிறப்பு வேறு எந்த மொழிக்கும இல்லை.

வித்துவான் கி. வா. ஜகந்நாதன் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டதாவது:-

‘இறையருள் பெற்றவர்களின் வாக்குகள் யாவும் இறைவனுடைய வாக்காகவே கருதப்படுகின்றன. அவர்கள் தமது புலமையை வெளிப்படுத்தப் பாடல்களைப் பாடினர். இறைவன் அவர்கள் உள்ளங்களில் நின்று உணர்வூட்டப் பாடல்களைப் பாடினர்கள். இதனல் இறைவனுடைய வாக்குகளுக்கும் அவர்களது வாக்குகளுக்கும் வேறுபாடில்லை.’

முத்தமிழ்மணி பிரமஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதர் ‘வந்தியும் நந்தியும்’ என்பது பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் செய்தார்.

---

## கேதீச்சரத்தில்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாம் குறைவென்றும், தங்களுடன் இதுபோதுமென்றும், தங்கள் பிள்ளைகளுக்கு இது வேண்டாமென்றும், அவர்கள் ஆங்கிலம் படித்து உத்தியோகம் பார்க்க வேண்டுமென்றும் என்னிடம் பலர் கூறியுமுள்ளனர்.

மேலும் இந்தியாவிலே தமிழ்நாட்டிலே சில ஆண்டுகளுக்குமுன் 200க்கு மேற்பட்ட வேத பாடசாலைகள் இருந்துவந்ததில், இப்போது இருபதுதான் உள்ளனவாம். அப்படி இருக்க, ஈழத்திலே, அதுவும் கேதீச்சரததில் வேத பாடசாலையில யார் சேரப் போகிறார்கள் என்றும் நினைத்தேன். ஆனல் இங்கு நேரில் வந்து பார்த்ததும் நம்பவே முடியவில்லை.

பல அந்தணச் சிறுவர்கள், அதிகாலை 4 மணிக்கே ஸ்நானம் செய்து, தூயஆடை உடுத்தி, வீபூதிதரித்து, (குடுமித் தலையுடனே) அந்தமடத்தில் சேர்ந்து அமர்ந்து, பகதியுடன் வேதகோஷங்கள் செய்த காட்சியைக் கண்டதும் இங்கு சைவசமயத்துக்கே புது வாழ்வு வருவதற்கான சுயசூசகம் போல் இருந்தது. கோவிலும் பூசா காலத்தில் அம்மாணவாகள் பூசைக்கான பல்கைங்கரியமும் செய்து பயிற்சி பெறுவதுடன் வேதபாராயணமும் செய்கிறார்கள். இதையெல்லாம் காண மகிழ்ச்சியாக இருந்தது. இதைப்பற்றி நாளை மேலும் எழுதுகின்றேன்

# "இறக்குமதிப் பொருள்களை ஆதரிக்கவேண்டும் அப்பொழுதுதான் நமது பொருள்களை ஏற்றுமதி செய்யலாம்"

யாழ்ப்பாணம், செவ்வாய் "லங்கா பெட்ரோல் இலங்கையின் இதர பாகங்களில் பிரபலமடைந்து வருகிறது நல்லமுறையில் விற்பனையாகியும் வருகிறது யாழ்ப்பாணத்தில் லங்காபெட்ரோல் விற்பனை மிகமந்தம் என்பதைக் கேள்விப்பட்டதும் எனக்கு ஆச்சரியமாக விருக்கிறது" என்று உணவு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின யாழ்ப்பாணம் பெடரோலிய கூட்டு ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் அளித்த தேநீர் விருந்துபசாரத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

விருந்துபசாரத்தில் உணவு வர்த்தக மந்திரியை வரவேற்றுப்பேசுகையில் யாழ்ப்பாணத்தில் லங்கா பெட்ரோல் விற்பனையாவது மிகக் குறைவென்றும் பெட்ரோலியம் கூட்டு ஸ்தாபனம் தனதாக்கிக் கொண்ட முன்னள் பெட்ரோல் குதச் சொந்தக்காரர்கள் பெரிதும் கஷ்டமடைவதாகவும் தெரிவித்தார்.

உணவு மந்திரி திரு. இலங்கரத்தின பேசுகையில் சில சுயநலமிகளும் ஏகாதிபத்திய வாதிகளின் கையாட்களும லங்கா பெட்ரோல் கூட்டுநவு மொத்த விற்பனவு ள்தாடனம் ஆகியவைகளுக்கு எதிராக பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றனரென்றும் இந்தப் பொய்ப்பிரசாரத்தை மக்கள் இப்பொழுது உணர்ந்து விட்டனரென்றும் கூறினர். யாழ்ப்பாணப் பகுதியில் உண்மை விபரங்கள் விளக்கிக் கூறப்படவில்லை எனத் தாம் கருதுவதாகவும் அவர் சொன்னர்.

இதர நாடுகளுடன் இலங்கை செய்துள்ள வாத்தக ஒப்பந்தங்கள்பற்றி விளக்கிக் கூறிய உணவு அமைச்சர் இந்த ஒப்பந்தங்கள் பண்டமாற்று அடிப்படையில் செய்யபபட்டுள்ள ஒப்பந்தங்களென்றும் இறக்குமதிப் பொருள்களை மக்கள் ஆதரித்தால்தான் நமது விளை பொருள்களை இதர நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யமுடியுமென்றும் கூறினர். பெட்ரோல் இலங்கையில் உறபத்தி செய்யபபடவில்லையாயினும் இலங்கைப் பொருள்களுககுப் பதிலாகவே பெட்ரோல இறக்குமதி செய்யப்பட்டுவருகிறதென்றும் மந்திரி கூறினர்.

---

## "இனவேறுபாடு ஒழியவேண்டும்"

வாஷிங்டன், ஜன. 7 அமெரிக்காவில் இனவேற்றுமை முற்றாக ஒழிக்கப்படவேண்டுமென்று உபஜனதிபதி திரு. லின்டன் ஜோன்சன் கூறினர். ஆபிரகாம் லிங்கனின் மனித உரிமை சாஸனப் பிரகடனதினக் கொண்டாட்ட வைபவத்தில் திரு. ஜோன்சன் பேசினர். கல்வித்துறையிலும் மற்றய துறைகளிலும் வேற்றுமை பாராட்டிக்கொண்டு எல்லோருக்கும் சுதந்திரம் வழங்கிவிட்டதாக நாம் பெருமைப்பட்டுவிட முடியாது என்று அவர் சொன்னர்.

---

## தெவிட்டா இன்ப...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யும், முடிந்த முடிபையும், விஞ்ஞனகலர், பிளரயாகலர், சகலர் என்னும் முத்திற ஆஷம வர்க்கத்துள் முதன்மைவாய்ந்த விஞ்ஞானகலராகும் வண்ணம் நம்மைப் பேதப்படுத்தி ளைர்த்துவிட்ட திருவருட்சக்தியாம் எம் அன்னைதன் திருவடித்திறத்தையும் வாயாரப் பாடி ஆனந்தக கூத்தைத ஆடுவாயாக.

(நாளை இதழில் முடியும்)

# மன்னாரில் மழை

மன்னார், திங்கள் கடந்த நான்கு தினங்கள் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக இப்பகுதியில் பல கஷ்டங்கள் தோன்றியுள்ளன. வெள்ளம் வீதிகளில் பெருகுவதினல், போக்குவரத்துச் செய்வது கஷ்டமானதாக இருக்கிறது. குளங்களிலும் அளவுக்கு மீறி நீர் தேங்கியுள்ளது. வயல்கள் யாவும் வெள்ளக்காடாகவே காட்சியளிக்கின்றன. சில தினங்களுக்கு இந்த மழை நீடிக்குமானல் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாது என இப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர்.

இலங்கையின் பல்வேறு இடங்களிலும் மழை தொடர்ந்து பெய்வதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

---

## ‘கொங்கிறீட் சிலிப்பர்’

கொழும்பு, திங்கள் தங்களுக்கு தேவையான 'சிலீப்பர்' கட்டைகளை இனிமேல் 'கொங்றீட்' சிமெந்தினல் செய்வதற்கும், அவற்றைச் செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கும் புகையிரதப் பகுதி திட்டமிட்டுள்ளது. புகையிரத பகுதியின் இத்திட்டத்தை இப்பொழுது 'மராமத்து, போக்குவரத்து அமைச்சு பரிசீலனை செய்து வருகிறது.

மரத்தாலான 'சிலீப்பர்' கட்டைகள் கிடைப்பது அரிதாகிக்கொண்டு வருவதாலேயே புகையிரத பகுதியினர் 'கொங்கிறீட்டி'னல் சிலீப்பர்களைச் செய்யத் திட்டமிட்டுள்ளனர். இப்படிச் செய்வதனல் பலமான கட்டைகளை வேறு வேறு வேலைகளுக்குப் பிரயோசனப்படுத்தலாம் எனவும் கருதப்படுகிறது. மரத்தால் செய்யபபடும் சிலிப்பர்க்கட்டைகள் விரைவில் தேய்ந்துவிடுவதாகவும், அதனல் பெருந்தொகையான மரங்கள் தேவைப்படுவதாகவும், சிலகாலங்கள் இந்த மரங்களுக்கு புகையிரதப் பகுதி காட்டிலாகாவிடம் தங்கியிருந்ததென்றும் இப்பொழுது அந்த மரங்களைப் பெறுவது மிகவும் கஷ்டமாகி வருவதாகவும் புகையிரதடபகுதியினர் தெரிவித்தனர்.

---

## சமஷ்டிக் கட்சி கிளை

யாழ்ப்பாணம், திங்கள் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அனுமதியுடன் காங்கேசன்துறையில் தமிழரசுக் கட்சிக் கிளையொன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. கிளை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஆ. தெட்சணமூர்த்தி, காரியதரிசி: திரு. என். கருணைனந்தசிவம், தனதிகாரி: திரு. கே. கே. சின்னதுரை, 15 பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

---

வாஷிங்டன், ஜன. 7 சவூதி அரேபியாவின் கோரிக்கையின்மீது சவூதி அரேபியாவின் டிராங் தளத்துக்கு போர் விமானங்களை அனுப்புவதென்று அமெரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சவூதி அரேபியக் கடலுக்கு நாசகாரிக் கப்பல் ஒன்றையும் அமெரிக்கா அனுப்புகிறது.

# மாணவர் மலர்





# நோயும் மனிதனும்

— தென் புலோலியூர் கே. கணபதிப்பிள்ளை —

எம்மை நோய்கள் வராமல் பாதுகாக்கநாம்சுகாதாரமுறையைக் கைக்கொள்ளவேண்டும். அவற்றுக்கு வைத்தியமும்செய்தல் நல்லது. கிருமிகளினுலேயே அதிகமான நோம் எமக்குப் பரவுகின்றது. அதற்கு உதாரணமாகப் பாண்டு நோயைப் பரப்பும் 'கொழுக்கிப் புளுவை' எடுக்கலாம். மலேரியா, நெருப்புக்காய்ச்சல், கசம் முதலிய நோய்களை விளைவிக்கும் கிருமிகள் மிகவும் நுண்ணியன. அவற்றைப் பூதக்கண்ணடி மூலமே பார்வையிடலாம். கசம், நோயாளியின் எச்சில்மூலமும், கண் நோய் கண்ணில் ஏற்படும் புண்மூலமும், நெருப்புக் காய்ச்சல் மலமூலமும், மலேரியா இரத்தத்தின் மூலமும் பரவுகின்றன. நீர், உணவு என்பனவற்றின் மூலம் வயிற்றுளைவு, பேதி என்பனவும், எலி, தெள்ளுப்பூச்சி என்பவைமூலம் 'பிளேக' நோய்க் கிருமிகளும் எளிதில் பரவும் தன்மையுடையன. அம்மை, சின்னமுத்து, பொக கிளிப்பான், கசம், ஜலதோஷம் முதலிய நோய்களைப் பரப்பும் நோய்க்கிருமிகள் காற்றில் உண்டாகி மனிதனோடு பரவுகின்றன. இனி பொதுவாகப் பாடசாலை மாணவரிடையே காணப்படும் நோய்களையும் அதைத் தடுப்பதற்குரிய மருந்துகளையும் பார்பபோம்.

## க்ஷயரோகம்

இது ஒரு கொடிய தொற்று நோய். இந்நோயால் இறபபவர்கள் தொகை ஈழநாட்டில் அதிகரித்துவருகின்றது. காற்றோட்டமில்லாத இடங்களிலும் அசுத்தம் நிறைந்த இடங்களிலும் மிகப்பரவுகின்றது. இந்நோய் ஆரம்பமாவதற்கு அறிகுறிகள் இருமல், காய்ச்சல, இரவில் வியர்வை வருதல் முதலியனவாம். மேலே கூறப்பட்ட குறிகளில் ஒன்றோ, பலவோ உடையவர்கள் தாமதமின்றிக் குறித்த டாக்டர்களிடம் சென்று தமது உடலை 'எக்ஸ்ரே' மூலம் பரிசோதித்துக்கொள்ளல்வேண்டும். இந்நோய் பரவாதிருக்க இந்நோய் கண்டவர்கள் க்ஷயரோக ஆஸ்பத்திரிக்குச் சென்று சிகிச்சை பெறல்வேண்டும். ஒழுங்கான தேகப்பயிற்சி, சூரியவெளிச்சம், சுத்த உணவு, சுத்தக் காற்று என்பவற்றால் இவ் வியாதியைத் தடுத்துக்கொள்ளலாம்.

## மலேரியா

இந்தநோய்க்கு காட்டுக்காய்ச்சல், குளிர்காய்ச்சல், முறைக காய்ச்சல் என்றும் பெயர்கள் வளங்குகின்றன. அனோபிலிஸ் நுளம்பால் மலேரியா பரவுகின்றது. தலையிடி, வாந்தி, கடுமையான காய்ச்சல், தினமும் காயும். சிலருக்கு இரண்டுநாளுக் கொருமுறையாகவும் காயும். நுளம்பின் விருத்தியைத்தடுப்பதாலும், நுளம்பு வலையை உபயோகித்தலாலும் இந்நோய் பரவுதலைத் தடை செய்யலாம். "குயினைன்" என்னும் மருந்தே இதன் பரிகாரமாகும்.

## வயிற்றுளைவு

வெயில் காலங்களிலே இந்நோய் அதிகமாக உண்டாகின்றது. 'பஸிலி', 'அமீபா' என்னும் கிருமிகள் இந்நோயை பருவ்க்கின்றன. இந்நோயாளா பாவிக்கும் பாத்திரங்களை மற்றையோர் உபயோகிக்காமையும், கிருமிநாசினியை உபயோகித்து மலதைப்புதைத்தலும் இந்நோய் பரவுதலைத் தடுக்கும் முறைகளாம். குளிர்மையான உணவு, வில்வம்பழத் தசையைக் குளிர்ந்த நீரிற் கரைத்து வடித்து சீனியும் எலுமிச்சம் பழமும் கலந்த பானம் முதலியன சிகிச்சை முறைகளாகும். இந்நோய் மாறின பிறகு ஆமணக்கெண்ணெய்ப் பேதி மிகவும் சிறந்தது.

## சின்னமுத்து

சிறுவர்களுக்கும், பச்சிளம் குழந்தைகளுககும் இந்நோய் தோற்றுகின்றது ஆரம்பத்தில் தடிமன், கண்சிவத்தல், நாசிகளிலும் கண்களிலும் நீர் வடிதல், காய்ச்சல் முதலியன இதன் அறிகுறிகளாகும். நோயாளிகது பால், கஞ்சி முதலிய குளிர்மையான உணவு கொடுத்தல் வேண்டும். கொபபிளிப்பானுககுக் கைக்கொள்ளும் தடுப்புமுறைகளையே அனுசரித்தல்வேண்டும். கவலையீனமாக இருந்தால் 'நியூமோனியா' முதலிய கொடிய சுவாச நோய்கள் ஏற்படக்கூடும்.

## தேகாப்பியாசம்

பாடசாலை மாணவர்களுக்கு தேகாப்பியாசம் மிகவும் அவசியம். நம் தேகம் உறுதி அடைவதற்கும், அழகுபெறுவதற்கும் தேகாப்பியாசம் அவசியமாகும் நாள்தோறும் காலையிலும், மாலையிலும் நாம் தேகாப்பியாசம் செய்யவேண்டும். தேகாப்பியாசம் செய்யும்போது உடலின் சகல உறுப்புகளும் அப்பியாசம் அடைதல்வேண்டும். தினசரி பாடுபட்டு உழைக்கும் தொழிலாளி, வயல்கள் தோட்டங்களில் வேலைசெய்வோர் போன்றவர்களுக்குத் தேகாப்பியாசம் அவசியம் இல்லை. தேகாப்பியாசத்தால் உடலும் உள்ளுறுப்புகளும் பலமடைகின்றன. உணவு இலகுவில் சீரணிக்கின்றது. ஞாபகசக்தியும், மனோ முயற்சியும் அபிவிருத்தியடைகினறது; தேகம் இலட்சணம் அடைகின்றது.

## ஓய்வு

நமது தேகம் ஓர் இயந்திரம் போன்றது. இயங்கிக்கொண்டிருக்கும் ஓர் இயந்திரத்திற்கு ஓய்வு வேண்டப்படுவதுபோல் நமது உடலுக்கும் ஓய்வு தேவை. மனிதனுக்கு நித்திரையே சிறந்த ஓய்வாகும். மன ஓய்வுக்கு தெய்வவழிபாடு மிகவும் அவசியமாகும்.

# தமாஷ் போட்டி : 2

தமாஷ் போட்டியில் எப்படி பங்குபற்றுவது? விதிகள் ஏதும் உண்டா? என்னமாதிரி விடை எழுதுவது? என்றெல்லாம் பலர் பலவிதமான கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். தமாஷ் போட்டியில் மட்டுமின்றி, "மாணவர்மலரில்" வெளியாகும் எல்லா பகுதிகளிலும் நீங்கள் தாராளமாகப் பங்குபற்றலாம். நிபந்தனைகளோ அல்லது கட்டுப்பாடுகளோ எதுவுமில்லை.

தமாஷ் போட்டியில் பங்கு பற்றுகிறவர்கள் முக்கியமாக ஒன்றைக் கவனிக்க வேண் ம். அதாவது! தமாஷ் போட்டியில் அநேகமாக இருவர் இடம் பெறுவார்கள். ஒருவர் ஒரு கேள்வி (சுவையுடன்) கேட்பார். மற்றவர் (ஹாஸ்யத்துடன்) பதில் சொல்லுவார். நீங்கள் சுவையுடன் கூடிய பதிலைத்தான் எமக்கு எழுதி அனுப்ப வேண்டும். வேறு எதுவும் எழுதவேண்டாம்!

முதலில் இவ்வாரம் வெளியாகவிருக்கும் தமாஷ்போட்டி இலக்கம் இரண்டை கவனியுங்கள்.

ஃ ஃ ஃ

பாலு: அதென்ன......எப்ப பார்த்தாலும் நீங்கள் என்னிடமே கடன் கேட்கிறீர்கள்...?

நேசன்: ......?

ஃ ஃ ஃ

சரி... இனி விஷயத் துக்கு வருவோம். பாலு, நேசனிடம் ஏதோ சொல்லியிருக்கிறார் இதற்கு நேசன் ஹாஸ்யத்துடன் பதிலளித்திருக்கிறார். கேள்வி என்னவென்றால், நேசன் என்ன பதிலளித்திருப்பார் என்பதை நீங்கள் யூகித்து எமக்கு எழுதவேண்டும். என்ன விளங்கிக்கொண்டீர்கள்தானே? சரி, நேசன் என்ன பதிலளித்திருப்பார் என்பதை யூகித்து எமக்கு இம்மாதம் 18-ம் திகதி சனிக்கிழமைக்கு முன்னதாக தபாலட்டையில் மாணவர்மலர் ஈழநாடு, த. பெ. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

## உங்கள் பிரச்னை

ஐ. முருகையா, சூராவத்தை: "சென்றவாரம் மூளைக்குவேலை பகுதியில் கேட்கப்பட்ட கேள்விக்கு சரியான விடையனுப்பினேன். ஏன் எனது பெயர் வெளியாகவில்லை?"

உங்களது தபாலட்டை எமக்கு திங்கட்கிழமைதான் கிடைத்தது!

ஃ ஃ ஃ

கே. கணபதிப்பிள்ளை, தென்புலோலி, பருத்தித்துறை: "போட்டி ஒன்றை ஆரம்பித்து பரிசில்கள் கொடுப்பதாகக் கூறியிருந்தீர்களே. இதுபற்றிய தகவல் ஒன்றையும் ஏன் வெளியிடவில்லை? "அறிவுச் செல்வம்" மாணவர்களுக்கு பெரிதும் பயன்படுகிறது. துப்பறிய முடியுமா? பகுதி எங்கள் மூளைக்கு நல்ல வேலையை கொடுக்கிறது."

பாராட்டுதல்களுக்கு எமது நன்றி. போட்டி ஆரம்பிப்பதை பலர் விரும்பாத காரணத்தினால் அதைத் தற்போதைக்கு ஒத்திவைத்துள்ளோம்.

ஃ ஃ ஃ

ஆர். கமலா, ஊர்காவற்றுறை: "கிறிஸ்மஸ் தினத்தன்று வெளியாகிய நெஞ்சில் நிறைந்தது" கதையை வாசித்து வயிறு குலுங்கச் சிரித்தோம் இப்படியான கதை முதலாம் நகதியன்றும் வெளிவருமா என்று ஆவலுடன் எதிர்பார்த்தோம் கிடைத்தது, ஏமாற்றந்தான்!"

வருடபொங்கலுக்கு அடுத்த நாள் வெளியாகும் மாணவர் மலரில் சுவையான கதை யொன்று வெளியாகிறது எதிர்பாருங்கள்.

ஃ ஃ ஃ

இ. சுந்தரி, செளந்தரி, ராஜபாககியலட்சுமி, உடுவில்: "சந்தேகம் தீருங்கள்" பகுதி ஏன் வெளியாவதில்லை? காரணத்தை அறிய ஆவல்.

தவிர்கக முடியாத காரணங்களினால் சந்தேகம் தீருங்கள் பகுதி வெளியாகவில்லை அடுத்த வாரம் மீண்டும்வெளியாகும்.

# மூளைக்கு வேலை

கடந்த வாரம் நாம்கேட்ட கேள்விக்கு அநேகமாக எல்லோருமே சரிபான விடையெழுதியிருக்கின்றார்கள். சென்றவாரம்நாம்கேட்ட கேள்வியின் சரியானவிடை: 'பெண் நுளம்பு.' சரியான விடையெழுதிய பின்வருபவர்களுக்கு எமது பாராட்டுதல்கள்.

பத்மராணி விவேகானந்தா, வியாபாரிமூலை,பருத்தித்துறை; ரி. எம். இராமக்கிருஷ்ணன், கரம்பன் கிழக்கு; இ. பரம்சோதி, கரவெட்டி; க. ஞானமுத்தன், கைதடிதெற்கு; இ செல்வஜோதி, கரவெட்டி மேற்கு; தியாகமலர் குண்டுமணி, வதிரி; க. சீவகாருண்யம், ஊர்காவற்றுறை; இ. மீனா, வட்டுக்கோட்டை மேற்கு; ஆ. நா. தியாகராசா, நெடுந்தீவு; ம. விவேகானந்தன், சாவகச்சேரி; தி. சரவணபவன், சுன்னுகம்; ஐ முருகையா, சூராவத்தை; எ. வி. சிங்கம், மாவையூர்; இ. கௌரிபாலன், கலட்டி; ஆ நா. சுந்தரலிங்கம், நெடுந்தீவு; மு. சபாரத்தினம், காரைநகர்; தர்மபூபதி கந்தையா, அல்வாய் தெற்கு; மகேந்திரராணி திருஞானசம்பந்தர், வல்வெட்டித்துறை; சபா புஷ்பநாதன், சுன்னுகம்; ஜே. இந்திரா, நெடுந்தீவு கிழக்கு; த. தம்பிரத்தினசோதி, இணுவில்; சி. சகுந்தலா, அளவெட்டி; த. த. பெஞ்சமின், கற்கோவளம்; ச. கந்தசாமி, கைதடி; சி. பாரதாமணி, உடுப்பிட்டி; எஸ். டி. ராஜன், உடுப்பிட்டி; ஏ. வி. கந்தையா நீலகண்டன், கரணவாய் தெற்கு; கா. நாகதாசன். அராலி தெற்கு; கே. மனோரஞ்சிதமலர், பத்தமேனி; க. பாலகிருஷ்ணன், மாவிட்டபுரம்; து. இராசலிங்கம், மானிப்பாய்; த. சுப்பிரமணியம், காந்திநகர்; ரமணி, மணற்காடு; வி. சச்சிதானந்தன், கரம்பொன்கிழக்கு; கா. சதானந்த சர்மா, சுன்னுகம்; அ. கனகசூரியர், ஊரெழு மேற்கு; பொ. கண்ணன், ஊரெழு; சி மகேந்திரன், ஏழாலை மேற்கு; பா. ஸ்ரீபிரியதாசன், பருத்தித்துறை; நா. கனகலிங்கம், அல்வாய்; மு இராசலிங்கம், காங்கேசன்துறை; மா. கமலாதேவி (10 வயது)சிறுப்பிட்டி வடக்கு; செ. நவரத்தினம், நீர்வேலி; எச். சரஸ்வதி, மணற்காடு; சி. கேசவன், மாவிட்டபுரம்; ஆ. மு. ஆனந்தன், இராஜேஸ்வரி முருகுப்பிள்ளை, சி. சண்முகலிங்கம், காங்கேசன் துறை.

## இவ்வாரக் கேள்வி

இலங்கை போக்குவரத்து சபையைச் சேர்ந்த அதிகாரி அவர். பஸ்ஸை நிறுத்துமிடத்தில் நாம் நின்றால் அல்லது அநேகமாக கையைக் காட்டினால் தான் ஓடிவரும் பஸ் நிற்கும் ஆனால் குறிப்பிட்ட அந்த அதிகாரி, பஸ்ஸில் செல்லவிரும்பினால், வீதியில் எந்த இடத்தில் நின்றாலும் பஸ் நின்றுவிடும்! அன்றொருநாள்; பஸ்ஸில் செல்வதற்காக அவர் காத்திருந்தார். ஆனால், பஸ் நிற்பாட்டும் இடத்தில் அல்ல! வீதியோரமாகச் சென்றுகொண்டிருந்தார் அவர். தூரத்தில் பஸ் வருவதைக் கண்டதும் அவர் சந்தோஷப்பட்டார். ஆனால், அந்த இ. போ. ச. பஸ், அவரையும் மதிக்காது, அவரை ஏற்ருது, அவரைக் கடந்து சென்றுவிட்டது! அந்த அதிகாரிக்கு சரியான கோபம். கேள்வியென்னவென்றால்,அந்த அதிகாரியை மதிக்காது, பஸ் ஸ்டாக்காக, டஸ்ஸையே பார்த்துநின்ற அவரை ஏற்றிச் செல்லாது, அந்த பஸ் சென்றதன் காரணம் என்ன?

குறிப்பிட்ட அந்த பஸ்ஸில் பிரயாணிகள் இருந்தார்களென்பதும், அந்த அதிகாரியை கட்டாயம் ஏற்றிச் சென்றிருக்க வேண்டுமென்பதையும் உங்களுக்கு சொல்லிவைக்க விரும்புகின்றோம்

கேள்வியை பல தடவைகள் வாசித்து விடையை, எதிர் வரும் சனிக்கிழமைக்கு முன்னதாக "மாணவர்மலர்" ஈழநாடு, த. பெ. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள்.

— சாந்தா

## அறிவுச் செல்வம்

பாரிசிலுள்ள 'ஈபெல் டவர்' என்னும் கட்டடம், 984 அடிகளாகும். இதன் உச்சிமீதிருந்தே அறுபது மைல் சுற்றளவுக்குப் பார்க்க முடியும்.

—எச். சரஸ்வதி, மணற்காடு.

ரொமூலஸ் என்பவரால், கி. மு. 753-ம் ஆண்டில் ரோம் நகர் கட்டப்பட்டது. கொலம்பஸ். அமெரிக்காவுக்கு 1492-ம் ஆண்டில் சென்ற கப்பலின் பெயர் சாந்தாமெரியா.

—அ தவமணி, ஆவரங்கால்.

ஏழு நிறங்கள் ஒளியிலுண்டு என்பதைக கண்டு பிடித்தவர் சேர். ஐசாக் நியூட்டன்.

—கந்தையா நீலகண்டன், கரணவாய் தெற்கு

உலகத்திலே மிக வெப்பமான இடம் அஸீசியா(லீபியா), மிகக் குளிரான இடம் அண்டாக்டிகா, மிக உயர்ந்த கட்டடம் நியுயோர்க்கிலிருக்கும் எம்பயர் ஸ்டேட்.

—கு. அரவிந்தன், காஙகேசன் துறை.

## துப்பறிய முடியுமா?

ராஜாராம் கொலை செய்யப்பட்டதற்கும் வசந்தன் கைது செய்யப்பட்டதற்குமான காரணத்தை சி. ஐ. டி. ஷகானே கூறுகிறார். கேட்டுப்பாருங்கள்.

'அந்தக் கைலேஞ்சியில் 'எம்' என்ற அடையாளம் இருந்ததும் இந்தக சேஸை நான் சுலபமாக முடித்துவிடலாம் என்று நினைத்தேன். ஆனால், அதையும் பார்க்க சுலபமாக நான் கொலையாளியைக் கண்டுபிடித்துவிட்டேன். கைலேஞ்சியை கையிலெடுத்ததும் நான் லேசாகச் சிரித்ததற்கு காரணம், அந்தக் கைலேஞ்சியில் ஒருவித'சென்ட்' மணந்தது. அதே 'சென்ட்' மணம் வசந்தனின் உடைகளிலிருந்தும் மணந்தது. வசந்தனை விசாரிக்கும்பொழுதே அந்த மணம் வீசத்தொடங்கிவிட்டது. அப்பொழுது என்னையறியாமலேயே ஒருவித சிரிப்பு எனக்கு உண்டாகிவிட்டது. ஆகையினால் கைலேஞ்சியில் காணப்பட்ட 'எம்' அடையாளம் எனக்கு உதவிசெய்யவில்லை. ஆனால் அதே கைலேஞ்சியில் கமகம என்று வீசிய 'சென்ட்' மணம் தான் கொலைகாரனை கண்டு பிடிகக உதவிசெய்தது.

சி. ஐ. டி ஷகான, வசந்தனைக் கைது செய்ததற்கான காரணத்தை எவருமே சரியாக எழுதவில்லை ஆகையினால் சென்ற வாரம் . வெளியான கேள்விக்கு டை யெழுதிய எண்பத்திநாலு (8+) பேரில் ஒருவருமே சரியான

(7-ம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர் இடமாற்றம் மே மாதம் வரை ஒத்திவைப்பு

## தூதுகோஷ்டியிடம் கல்வி மந்திரி அறிவிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

"யாழ்ப்பாணம் சரித்திரப் பிரசித்திவாய்ந்த கட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தேசிய ஆசிரியசங்கத்தின் தூதுகோஷ்டியை முதன் முதலில் சந்திப்பது முன்னையதிலும் பார்க்க சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும்" என்று கல்வி அமைச்சர் ஜனாப் பதியுதீன் மாமூத் யாழ்ப்பாணம் கோட்டையிலுள்ள அரச மாளிகையில் நேற்றுத் தம்மைப் பேட்டிகண்ட தேசிய ஆசிரிய சங்கத் தூதுகோஷ்டியிடம் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். இத் தூதுகோஷ்டியுடன் வட இலங்கை ஆசிரிய சங்கமும் சென்றிருந்தது.

தேசிய ஆசிரிய சங்கத்தலைவர் திரு. வி. தம்பிப்பிள்ளை தலைமையில் திருவாளர்கள் எல். எம். டீ. சில்வா, எட்வார்ட் வீரசேகரா, ஏ. ஈ. தம்பர், என். சபாரத்தினம், ஏ. ஆர். இராசநாயகம், எம். பேராயிரவர், எஸ். பி. நடராசா, ஈ. சபாலிங்கம், ஐ ஆர். அரியரத்தினம், பண்டிதர் டி. துரைசிங்கம் ஆகியோர் தேசிய ஆசிரியர் சம்கம், வட இலங்கை ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் சார்பில் தூதுகோஷ்டியில் இடம் பெற்றிருந்தனர்.

பொறுப்பேற்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களின் தேசிய ஆசிரிய சங்கம் இந்நாட்டின் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த சங்கமென்றும் அரசாங்கத்தின் புதிய கல்வித் திட்டத்திற்கு தமது பூரண ஒத்துழைப்பைத் தருவதாகவும் தூதுகோஷ்டி அமைச்சரிடம் தெரிவித்ததோடு திறமான கல்வியைப் புகட்டுவதில் ஏற்படும் பிரச்சினைகளில் அரசாங்கத்திற்கு முழு உதவியும் அளிப்பதாகவும் தெரிவித்தது.

### உத்தரவை உடன் வழங்கினர்

இத்தூதுகோஷ்டியின் வாக்குறுதியில் முழுத்திருப்தியும் தெரிவித்துக்கொண்ட கல்வி அமைச்சர் தேசிய ஆசிரியர் சங்கம் தொழிற்சங்கத்துக்குரிய சகல வாய்ப்புக்களையும் அனுபவிக்கலாமென்றும் புதிய தொழிற்சங்கமாக இதனை பதிவுசெய்து கொள்ள வேண்டுமென்றும் எழுத்து மூலம் தமது உத்தரவையும் உடனடியாகவே வழங்கினர்.

வடஇலங்கை ஆசிரியர் சங்கத் தூதுகோஷ்டி, பெரியளவில் செய்யப்படவிருக்கும் ஆசிரியர் இடமாற்றங்களை கூட்டுச் சபையின் இடமாற்றத் திட்டம் சமர்ப்பிக்கும்வரை தாமதித்துவைக்க வேண்டுமென்று அமைச்சரிடம் கோரியது. அகில இலங்கையிலுமுள்ள ஆசிரிய சங்கங்களினதும், கல்வி இலாகா உத்தியோகத்தர்களினதும் பிரதிநித்துவம் கொண்டதாகவே இக் கூட்டுச்சபை அமையுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

### மேமாதம்வரை இடமாற்றம் இல்லை

இப்படியான சபையின் திட்டப்படி இடமாற்றஞ் செய்வதால் அரசியல் தலையீட்டைத் தவிர்க்கலாமெனவும் இப்படியான திட்டம் சகலருக்கும் திருப்தியளிக்குமென்றும் ஏற்றுக்கொண்ட திரு. பதியுதீன் மாமூத் கூட்டுச்சபையின் திட்டம் வரும்வரை வருகிற மே மாதம்வரை இடமாற்றம் யாவையும் தாமதித்து வைப்பதாக உறுதியளித்தார்.

ஆசிரியர்களின் சம்பள உயர்வு சம்பந்தமாகக் கருத்துத் தெரிவிக்கையில், பிள்ளைகளின் தமய்ப்பாஷையில் கல்வி புகட்டப்பட வேண்டுமென்பது தான் அரசாங்கத்தின் கொள்கையென்றும் சொன்னர்.

ஆசிரியர் பதவி உயர்வு, சிரேஷ்டத்துவம் போன்ற விஷயங்கள்பற்றியும் தூதுகோஷ்டி பேச்சுவார்த்தை நடாத்தியது. கடந்த சில காலமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த "ஸ்பெஷல் போஸ்ட்" நியமனங்களை திறமை சிரேஷ்டத்துவம் ஆகியவைவைக் கொண்டு மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

பொறுப்பேற்கப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள் எந்த விஷயத்திலும் ஆத்திரப்படக்கூடாதென்றும் சிறு விஷயங்களை உதாசீனம் செய்து நடந்துகொள்ளவேண்டும் என்றும் அரசாங்கம் எதையும் பாதகமாகச் செய்துவிடாதென்றும் அமைச்சர் உறுதி கூறினர்.

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ்தராதரப் பத்திர ஆசிரியர்சங்கத் தூதுகோஷ்டியும் கல்வி அமைச்சரைப் பேட்டிகண்டு ஒரு மகஜரையும் சமர்ப்பித்தது. வடபகுதி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் வருடாவருடம் தராதரப்பத்திர ஆசிரியர்களில் ஐம்பது வீதமானவர்களை அனுமதிப்பதற்கு அமைச்சர் சம்மதம் தெரிவித்ததாகத் தெரிகிறது.

அண்மையில் கல்விப் பகுதியால் செய்யப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றத் திட்டம் நியாயமானது என்றும் அதை உடனடியாக அமுல் நடத்தவேண்டுமென்று இத் தூதுகோஷ்டி கோரியது. ஐந்து வருடங்களுக்குமேல் வெளியிடங்களில் கடமையாற்றும் தராதரப்பத்திர ஆசிரியர்களையும் உள்ளூர்களுக்கு இடமாற்றஞ் செய்யவேண்டுமென்றும் கோரப்பட்டது. இதனைச் செய்துதருவதாக அமைச்சர் வாக்குறுதியளித்ததாகத் தெரிகிறது.

வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தூதுகோஷ்டி, முஸ்லிம் ஆசிரியர்கள் ஆகிய பல தூதுகோஷ்டிகள் கல்வி அமைச்சரைப் பேட்டிகண்டன

---

## ஆசிரியர்கள் நியமனம்

திருக்கோணமலை, திங்கள்

மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக்கலாசாலையிலிருந்து இவ்வருட பயிற்சியை முடித்து வெளியேறிய திருவாளர்கள ஏ. கே. இராசலிங்கம், எஸ். சின்னத்தம்பி, கு. பாலச்சந்திரன் ஆகியோர் வெளிமடை அரசாங்கப் பாடசாலைக்கு ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் பயிற்சி பெறுவதற்கு முன்னர் திருகோணமலை கோணேஸ்வர வித்தியாலயத்தில் ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். இவர்களோடு இதே கலாசாலையிலிருந்து இருவருட பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய செல்வி கா. இராஜேஸ்வரி திருக்கோணமலை சென் சேவியர் பாடசாலைக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

செவ்வாய் 8-1-63

காலை 6-45 திருவெம்பாவை அஞ்சல், 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 இருபது கேள்விகள், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 இசைச்சித்திரம், 9-45 எம். பி. பாலகிருஷ்ணன் — நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை. 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-35 கும்பகோணம் யு. ஆர். சந்திரா — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தர பள்ளிகளுக்கு, 1-00 கொட்டு முரசே — சித்திரம், 1-15 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்). 5-45 இசைப்பயிற்சி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 காவியங்கள் காட்டும் நற்பண்புகள் — பேச்சு, 7-45 கே. வி. நாராயணசுவாமி — பாட்டு. 9-15 மெல்லிசை, 9-30 'அன்பிற்கு இதுவாவில்லை' — நாடகம், 9-45 கலைச்சொல் கேளீர்.

## துப்பறிய முடியுமா?

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விடையைத் துப்பறிந்து எழுதவில்லை.

### துப்பறியுங்கள்!

குட்டி ஜமீந்தார் கஜநாதன் இறந்த செய்தி காட்டுத் தீ போல யாழ்ப்பாண நகரம் முழுவதுமே பரவிவிட்டது! யாழ்ப்பாணம் டேனிஸ் அவனியூவிலிருக்கும் லட்சாதிபதி மாட்சாமியின் வீட்டுக்கு பல நாட்களுக்குப்பின் நேற்றிரவு பத்தரை மணிக்குச் சென்ற அவர் 15 நிமிடங்களுக்குள் இறந்து விட்டார்.

கஜநாதனைப் பார்ப்பதற்கு சி. ஐ. டி. ஷகான் சென்றிருந்தார். கஜநாதனின் கழுத்திலிருந்து வழிந்த இரத்தம் வெள்ளமாக காட்சியளித்தது. நெஞ்சு, கைகளிலிருந்தும் இரத்தம் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது. இறந்துபோன கஜநாதனை பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் சென்று விட்டனர். ஆமாம்... கஜநாதன் கொலை செய்யப்பட்டிருக்கிறார்!

லட்சாதிபதி மாடசாமியின் வாசற்படிக்கு அருகில் கஜநாதன் இறந்துகிடந்தார். கஜநாதனின் மரணத்துக்கு காரணமாகவிருந்தவர், சி. ஐ. டி. ஷகான் துப்பறியுமுனனரே கண்டுபிடிக்கப்பட்டு விட்டார் ஆனால் 'அவர்' உடனடியாக கைது செய்யப்படவில்லை! பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்படவில்லை!! நீதிக்கு முன் 'அவர்' குற்றவாளியாக விருந்தாலும் 'அவருக்கு' உடனடியாகத் தண்டனை கிடைக்கவில்லை!!! மாடசாமியின் நெருங்கிய நண்பரான கஜநாதனைக் கொன்ற கொலைக்கு காரணமாக விருந்த அவர் பின்னர் துப்பாக்கிச் சூடுக்கு பலியாகி மரணமானர்!

என்ன சிக்கலாக விருக்கிறதா? சிந்தித்துப் பாருங்கள் பல தடவைகள் வாசித்து கஜநாதனின் மரணத்துக்கான காரணத்தை துப்பறியுங்கள் துப்பறிந்ததும் விடையை துப்பறிந்தேன், மாணவர் மலர், 'ஈழநாடு' யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள். சி. ஐ. டி. ஷகான் மீண்டும் உங்களை அடுத்த வாரம் சந்திப்பார்.

—'சி ஐ டி.'

## சென்.ஜோசப் கல்லூரி வெற்றி

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலை சனநைஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் சென் ஜோசப் கல்லூரிக்குமிடையே [illegible] நடைபெற்ற ஓர் உதைபந்தாட்டப் போட்டியில் சென் ஜோசப் கல்லூரி ஒரு கோலால் வெற்றியீட்டியது. இப் போட்டிக்கு திரு. கிருஷ்ணசாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். திருமலை நகராண்மைக்கழகக் குழுவிற்கும், திருமலை டயமன்ஸ் குழுவிற்கும் இடையே நடைபெற்ற ஓர் போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா ஒரு கோல் போட்டு, போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப்போட்டிக்கும் திரு. கிருஷ்ணசாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.




நீங்கள் அறியவேண்டியதோர் இரகசியம் பொஸ்

BOSS

மண்ணெண்ணெய் அடுப்புகள்

நீடியகால சேவையையும், சிக்கன சமையலையும் அளிப்பதற்கென தயாரிக்கப்பட்டவை.

சமையல் அடுப்பு — 27U — 2 பர்னர்கள்


போர்ஸலேன் மேற்புறம், கிரேட்ஸ் மற்றும் டிரம் புகைப் போக்கிகள். 2 கால் கலன் கிளாஸ் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும், நிற்கும் மோடல் உண்டு.

சமையல் அடுப்பு — 37U — 3 பர்னர்கள்

போர்ஸலேன் மேற்புறம், கிரேட்ஸ் மற்றும் டிரம் புகை போக்கிகள். 2 கால் கலன் கிளாஸ் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும். நிற்கும் மோடல் உண்டு.

சமையல் அடுப்பு — 20U — 2 பர்னர்கள்

மத்தியில் எரிபொருள் தாங்கி உள்ளது. சமைப்பதற்கென விசாலமான மேற்புற இடவசதியுண்டு. போர்ஸலேன் மேற்புறம். கிரேட்ஸ் மற்றும் டிரம் புகைப் போக்கிகள். 2 கால் கலன் கிளாஸ் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும், பின்புறமும், நிற்கும் மோடல் உண்டு



பொஸ் புகை பிடிக்காது, நாற்றம் அடிக்காது, கரி படியாது, சுலபமான இயக்கம்.

விசாரணைகளுக்கு: CWE ஸி. டப்ளியூ. ஈ. 40, மக்கலம் ரோட். ஸி. டப்ளியூ. ஈ. கடைகள் மருதானை மற்றும் வெளியூர் டிப்போக்கள்

CWE HW[illegible]

# ஆஸ்திரேலியாவில் குடியேறியவர் தொகை?

## பார்லிமெண்டில் வரும் கேள்வி

கொழும்பு, திங்கள்

ஆஸ்திரேலியாவில் நிரந்தரமாகக் குடியேறுவதற்காக சென்ற மூன்றுமாதக் காலத்துக்குள் இலங்கையிலிருந்து சென்ற இலங்கைப் பிரஜைகளின் பெயர்களை சமர்ப்பிப்பாரா? என்று திரு. வி. பி. செனிவிரத்தின நாளை பார்லிமெண்டில் கேள்விநேரத்தின் போது பிரதமமந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசியிடம் கேட்பார். ஆஸதிரேலியாவில் நிரந்தரமாகக் குடியேறியவர்களுக்கு இங்கிருந்து மாதாமாதம் பணம் அனுப்புவதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரி அனுமதியளித்துள்ள தொகை விபரத்தைச் சமர்ப்பிப்பாரா? என்று திரு. செனிவிரத்தின நிதிமந்திரியைக் கேட்கவிருக்கிறார்.

---

## தடை நீங்காது

கொழும்பு, திங்கள்

குதிரைப்பந்தயச் செய்திகளுக்குள்ள தடைகளை ரத்துச் செய்யவோ 1964-ம் ஆண்டு ஆகஸ்டுக்குப் பின்னரும் குதிரைப்பந்தயங்கள் தொடர்ந்திருக்கவோ எந்த விதமான உத்தேசமுமில்லை என்று உள்நாட்டு கைத்தொழில் கலாசார அமைச்சு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கை கூறுகிறது.

---

## இலக்கிய விழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் தமிழ் இலக்கிய விழாவில் சனிக்கிழமை காலை நிகழ்ச்சிகளில் வித்துவான் க. கி. நடராஜன் 'பத்தியிலக்கியம்' பற்றியும், மாலை நிகழ்ச்சிகளில் பண்டிதை சத்திய தேவி துரைசிங்கம், 'தமிழனின் சிறப்பியல்புகள்' பற்றியும், ஞாயிற்றுக்கிழமை மாலை நிகழ்ச்சிகளில் பண்டிதர் வ. நடராஜன் 'இக்காலத் தமிழ் நடை' பற்றியும் விரிவுரை நிகழ்த்த விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏனைய விபரங்களை 2-ம் பக்கத்திற் காண்க,

## சிவானந்த குருகுல ஆண்டுப் பரீட்சை

திருக்கேதீச்சரம், திங்கள்

திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபையினரால் நடத்தப்பட்டுவரும் வேதாகம பாடசாலையான சிவானந்த குருகுலத்தில் வேதாகமக் கல்வி பெறுவோர்களுக்கான முதலாவதாண்டுப் பரீட்சை நடத்தப்பட்டது. பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்கள் வருமாறு:-

மேற்பிரிவு: வை. கனகசபாபதி சர்மா (அதிவிசேஷ பிரிவு), மத்திய பிரிவு: ச. பாலசுப்பிரமணிய சர்மா, மு. இரத்தின சபாபதி சர்மா, சு ஹரிகரண கணபதி சர்மா, சி ஜோதிந்திர சர்மா ஆகியோர் விசேஷ சித்தியும், சோ. நடராஜ சர்மா சித்தியும் அடைந்துள்ளனர்.

கீழ்ப்பிரிவில்: ந. மகேஸ்வர சர்மா, ப. பாலசுப்பிரமணிய சர்மா, இ. பாலகிருஷ்ண சர்மா, இ. பாலசுப்பிரமணிய சர்மா, கு. ஜெகதீச சர்மா, வை. கார்த்திகேய சர்மா, ஆகியோர் விசேஷ சித்தியடைந்துள்ளனர்.

---

## மக்கள் வங்கி கிளை மந்திரி திறந்துவைப்பார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வடபகுதியில் முதலாவதாகத் திறந்துவைக்கப்படவிருக்கும் காங்கேசன்துறை மக்கள் வங்கிக்கிளை இம்மாதம் 15-ம் திகதி ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது. இந்த வங்கிக்கிளையை உணவு மந்திரி திரு. டி. பி இலங்கரத்தின திறந்து வைப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## பெருவில் 800 பேர் கைது

லிமா, ஜன. 7

பெரு அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு கம்யூனிஸ்டுகள் செய்த முயற்சி கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதுவரை 800 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். அரசாங்க இலாகாக்களை ராணுவ அதிகாரிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

## சிங்களத்தில் திருவாசகம்?

யாழ்ப்பாணம், செவ்வாய்

திருவாசகத்தை சிங்களத்தில் மொழிபெயர்க்க முயற்சியெடுக்கும்படி இலங்கை சாகித்திய மண்டல உறுப்பினரிடம் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை சாகித்திய மண்டல உறுப்பினரும் இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளருமான திரு. ஆ. சதாசிவம் திருக்கேதீச்சர திருவாசக விழாவிற்கு வந்திருந்தபோது அவரிடம் இந்த அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. திரு. சதாசிவம் இந்த அபிப்பிராயத்தை சாகித்திய மண்டலத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

---

## ரிஹாண்ட் அணைக்கட்டு

அலகாபாத். ஜன 7

உத்தரப் பிரதேசத்தில் 6 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட ரிஹாண்ட் அணையை பிரதம மந்திரி திரு. நேரு இன்று திறந்துவைத்தார். இந்தியாவின் மிகப்பெரும் நதிப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

---

## எழுத்தாளர் ஸ்தாபன சர்வதேசகூட்டம்

கொழும்பு, திங்கள்

சர்வதேச எழுத்தாளர் ஸ்தாபனக்கூட்டம் இம்மாதம் 30, 31-ம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும். இலங்கைப் பத்திரிகையாளர் சங்க ஆதரவில் இக்கூட்டம் நடைபெறும். பாரிசைச் சேர்ந்த திரு. ஜீன் மோரிஸ் ஹெர்மான் சர்வதேச எழுத்தாளர் ஸ்தாபனத்தின் தலைவராகும்.

---

## விவேகானந்தர் 100-வது தினம்

புதுடில்லி, ஜன. 7

சுவாமி விவேகானந்தரின் 100-வது பிறந்த தினத்தன்று மத்திய அரசாங்க காரியாலயங்களுக்கு விடுமுறை வழங்கப்படும்.

---

## பண்டாரநயகா தினம்

கொழும்பு, செவ்வாய்

காலஞ் சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் 64-வது பிறந்த தினம் இன்று அனுஷ்டிக்கப்படும்.

---

## "கிராம சேவகர்கள் பட்டியலை ரத்துச்செய்க"

கொழும்பு, திங்கள்

அரசாங்க சேவைக் கமிஷன் வெளியிட்ட கிராம சேவகர் பட்டியலை செல்லுபடியாகாமல் செய்யுமாறு பிரதம மந்திரியைக் கேட்டுக்கொள்வதென கண்டி, மாத்தளை, துவரேலியா மாவட்டங்களைச் சேர்ந்த கிராமத் தலைமைக்காரர்கள் முடிவு செய்திருக்கின்றனர். விண்ணப்பம் செய்யாதவர்களின் பெயர்கள்கூட இப்பட்டியலில் இடம் பெற்றிருப்பதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

---

## ஆஸ்பத்திரி கமிட்டி புதிய அங்கத்தவர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் கச்சேரியின் முன்னாள் காரியாலய உதவி அதிகாரியான திரு. எஸ். இலங்கைநாயகம்ஜே. பி., யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக் கமிட்டியின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆஸ்பத்திரிக் கமிட்டியின் தலைவராக டாக்டர் வி. டி. பசுபதி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## ஆனையிறவு, கிளி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குளம் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் இப்பகுதியிலுள்ள மக்கள் வேறு இடங்களுக்குச் செல்வதாகவும் தெரியவருகிறது.

ஆனையிறவுப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் வெள்ளத்தைத் தடுப்பதில் நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்தவர்கள் நேற்று முதல் தொடர்ந்து வேலை செய்து வருகின்றனர்.

**எம். பி. யின் வேண்டுகோள்**

யாழ்ப்பாணம்அரசாங்க அதிபருக்கு கிளிநொச்சி எம். பி. திரு. சிவசுந்தரம் அனுப்பியுள்ள தந்தியொன்றில், அப்பகுதியில் வெள்ள நிலைமை மோசமாகியிருக்கிறதென்றும் சில பகுதிகளில் போக்குவரத்துச் சேவை துண்டிக்கப்பட்டிருக்கிறதென்றும் உடனடியாக வள்ளங்கள் அனுப்பிவைக்குமாறும் கேட்டுள்ளார்.

திரு. சிவசுந்தரம், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்து மக்களுக்கு தமமாலான உதவிகளை அளித்து வருகிறார்.

---

## மணிவாசகர் மடாலயம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

காரைநகர் சிவன் கோவில் மாணிக்க வாசகர் மடாலயத்தில் திருவெம்பாவையை முன்னிட்டு வழமைபோல அன்னதானம் நடைபெற்று வருகிறது.

---

## ராதா கிருஷ்ணன்

பாட்னா, ஜன 7

ஜனாதிபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் இன்று பாட்னாவில் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத்தைச் சந்தித்தார்.

## இந்தியப் பிரயாணிகள் கஷ்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் செல்லும் பிரயாணிகள் இந்தியாவில் மெயில் வண்டியை தவறவிட நேர்வதாக புகையிரதப் பகுதிக்கு புகார்கள் கிடைத்திருப்பதாகத் தெரிகிறது. இதனைத் தொடர்ந்து கொழும்பில் இருந்து புகையிரத நிலைய அதிகாரியொருவர் மன்னாருக்கு கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் விஜயஞ் செய்து நிலமையை அவதானித்துச் சென்றுள்ளதாகத் தெரிகிறது.

பிரயாணம், வாரத்தில் மூன்று தினங்களாக மாற்றப்பட்ட பின்னரே இந்த நிலை தோன்றியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

---

## பொறுப்பதிகாரி புறப்பாடு

பீகிங், ஜன 7

சீனாவிலுள்ள இந்திய ஸ்தானிகராலய பொறுப்பதிகாரி டாக்டர் பானர்ஜி, ஆலோசனை கலக்கும்பொருட்டு இன்று புதுடில்லி புறப்பட்டார்.

---

## பாக் - சீன வர்த்தக ஒப்பந்தம்

கராச்சி, ஜன. 7

சீனாவும் பாகிஸ்தானும் முதல் முதலாகச் செய்து கொண்டுள்ள வர்த்தக ஒப்பந்தம் இருநாடுகளுக்கும் மிகவும் சாதகமான ஒப்பந்தம் என்று கருதப்படுகிறது. இந்த ஒப்பந்தம் நேற்று இங்கு கைச்சாத்திடப்பட்டது.

சினிமாஸ் திரைகளில் எதிர்பாருங்கள்!

**பொங்கல் திரை விருந்து !!**

ஜனவரி 11-ந் திகதி வெள்ளிமுதல்

காதுக்கினிய பாடல்களும், திடுக்கிடும்
சண்டைக் காட்சிகளும் நிறைந்த படம்
எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, ராகினி
எம். என். நம்பியார், எம். என். ராஜம்
எம். ஜி. சக்கரபாணி, கே. ஏ. தங்கவேலு
எம். எஸ். சரோஜா, மோகன
மற்றும் பலர் நடித்த

**ராணி சம்யுக்தா**

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
டைரக்ஷன் டி. யோகானந்த்

இப்பொழுது நடைபெறுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு
விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) மொடேர்ன் (பண்டாரவளை)

டி. ஆர். மகாலிங்கம், எம். ஆர். ராதா
அஞ்சலிதேவி, ஈ. வி. சரோஜா, ஏ கருணாநிதி
நடித்த

**ஆடவந்த தெய்வம்**

டைரக்ஷன்: நீலகண்டன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் - பண்டரிபாய்
நடித்த
**திருப்பிப்பார்**

## நீதி விசாரணைக்கமிஷன்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் பொதுக்காரியதரிசி டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தெரிவித்துள்ளார். ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் சட்டவிரோதமாக நடந்துகொள்ளவில்லை. சட்டவிரோதமான ஊர்வலம் எதிலும் பங்குகொள்ளவில்லை. பொலிஸார் அவர்களைத் தாக்கியபோது அவர்கள் தனியார் கட்டடங்களின் தாழ்வாரத்தில் நின்றனர்" என்று டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் கூறினார். "தமிழரசுக்கட்சி எம். பி. க்கள் மந்திரி இலங்கரத்தினவைச் சந்தித்திருப்பது உண்மைதான். சந்தித்தது சலுகைகள்கோருவதற்கல்ல. சில அநீதியான நடவடிக்கைகளுக்கு ஆட்சேபம் தெரிவிப்பதற்காகவும் தமிழ்ப்பேசும் மக்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட பாரபட்சமான சில சம்பவங்களை அகற்றுவதற்காகவுமே மந்திரியைச் சந்தித்திருக்கிறார்கள். நியாயத்தையே அவர்கள் கோரினார்கள்''என்று டாக்டர் நாகநாதன் சொன்னார். ''மந்திரிகள் எந்தப் பகுதிக்கும் சென்று அவர்கள் தங்கள் அலுவல்களைத் தாராளமாகச் செய்யட்டும். ஆனால் தங்கள் 'அடிமை'மக்களிடம் வாழ்த்தும் பூமாலைகளும் பெறும்முகமாக அவர்கள் எங்கள் பகுதிகளுக்குச் செல்வதை நாங்கள் எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்வோம்" என்று டாக்டர் நாகநாதன் கூறினார்.

## அணிவகுப்பில் அவர் இல்லை

யாழ்ப்பாணத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது தாக்குதலுக்குள்ளானவர்களில் ஒருவரான பழனி என்பவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார். இவரிடம் பொலிஸார் வாக்குமூலம் ஒன்றையும் பதிவுசெய்தனர். இவர் கொடுத்த வாக்குமூலத்தைக் கொண்டு இன்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஆள அடையாள அணிவகுப்பு ஒன்று நடைபெற்றது. இந்த அணிவகுப்பில் தம்மைத் தாக்கிய பொலிஸ்காரர் இல்லையென்று திரு. பழனி தெரிவித்துவிட்டுச் சென்றார். இவரது புகார்கள்பற்றி விசாரணை செய்து அறிவிப்பதாக பொலிஸ் உதவி சுப்ரின்டென்ட் தெரிவித்துள்ளார்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தல் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.